பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 21 சனிக்கிழமை 03.04.2021 கதிர் 149

### இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் சில அரசியல் பிரகிருதிகள், வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு அடிப் பதில் படு சூரர்கள்.

கொரோனா நெருக்கடி முடக்கத் தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட யாழ்.மக்களுக்கு நிவாரணமாக வழங்க பொது பக்கம்02 »

# மக்களின் துயரங்களைத் துடைக்க அரும்பாடுபட்டவர்!

## மறைந்த ஆயர் ஜோசப் ஆண்டகைக்கு பிரதமர் மஹிந்த இரங்கல்

போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங் களைத் துடைக்கவும், ஏழை மக் களுக்கு உதவவும் மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அரும்பாடுபட்டவர்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள இரங் கல் செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:-

அதிவணக்கத்துக்குரிய இரா யப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு குறித்த செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையடைந் தேன்.

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி யாழ்.மாவட்டத் தின் நெடுந்தீவில் பிறந்த இரா யப்பு ஜோசப் ☞ 2



# ஆயர் ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் திங்கள் தமிழ்த் தேசிய துக்க தினம்

## வடக்கு - கிழக்கு தமிழ் சிவில் சமூகம் பிரகடனம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 03

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் வண. பிதா இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவையொட்டி அவரால் தமிழ்த் தேசியத்துக்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக் கும் விதமாக வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தேசம் எங் கும் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாகப் பிரகடனபடுத்தப்படுத்துகின்றோம். இதற் குத் தமிழ்த் தேசியக் கட்சிகள், பொதுமக்கள் அனைவரும் ஆதரவு வழங்குவதுடன், திங்கட்கிழமை அனைவரும் தங் களின் வீடுகளிலும், பொது இடங்களிலும், வணிக நிலை யங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டும், உங்கள் உடைகளில் கறுப்புப்பட்டிகளை அணிந்தும் துக்கத்தை வெளிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

– இவ்வாறு வடக்கு – கிழக்கு தமிழ் சிவில் சமூகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

### யாழிலிருந்து பவனியாக எடுத்துச் செல்லப்பட்ட

# ஜோசப் ஆண்டகையின் உடல் மன்னார் ஆயர் இல்லத்தில்!

(ந.லோகதயாளன்)

மறைந்த மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் நேற்று யாழ்ப்பாணத் தில் இருந்து பவனியாக மன்னாருக்கு எடுத்துச் செல் லப்பட்டது.

இதன்போது மக்கள் வீதி யின் இரு பக்கமும் நின்று ஆயருக்கு அஞ்சலி செலுத் தினர்.

ஆயரின் உடல் ☞ 2



# வவுனியாவில் சிங்கள மக்களை இன்று சந்திக்கிறார் கோட்டாபய

வடக்கு மாகாணத்தின் 'கிராமத் துடன் கலந்துரையாடல்' முதலா வது நிகழ்வு வவுனியா மாவட்டத் தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெடிவைத் தகல்லு கிராம சேவகர் பிரிவில் இன்று நடைபெறவுள்ளது.

கிராமத்துடன் கலந்துரையா டல் 17ஆவது நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ☞ 11



# யாழின் பிரபல ஆசிரியர் அன்பழகன் காலமானார்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான தனியார் கல்வி நிலையங்களை யாழ்ப் பாணத்தில் நடத்திவந்த யாழ்ப்பாணத்தின் மிகப் பிரபல ஆசிரியரான அன்பொளி கல் வியகத்தின் நிர்வாகி வேலுப் பிள்ளை அன்பழகன் நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

புற்றுநோய்த் தாக்கத்தால் உடல் நிலைப் பாதிப் புக்கு உள்ளாகியிருந்த அவர், ☞ 2

# சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் யோகேஸ் மீது கொலைவெறித் தாக்குதல்!

### படுகாயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கொலை வெறித் தாக்குதலுக்குள்ளாகி படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யின் அதிதீவிர சிகிச்சைப் பிரி வில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நாவற்குழியில் 300 வீட்டுத் திட்டம் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோதல் சம்பவம் தொடர் பான சமரச முயற்சிக்குச் சென்ற சாவக்சேரி பிரதேச சபை உறுப் பினரான இராமநாதன் யோகேஸ் வரன் என்ற உறுப்பினர் மீது சர மாரியான தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. ☞ 11

# யாழில் மேலும் ஒருவர் கொரோனாவால் சாவு!

### நேற்று 6 பேருக்குத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 6 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர மருத்துவர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.

இவர்களில் யாழ்ப்பாணம் மாநகரைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என் றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 11

# நான் தமிழருக்கு எதிரானவன் அல்லன்; மாகாண சபை முறைமைக்கே எதிர்ப்பு!

## வடமராட்சி கிழக்கில் அமைச்சர் வீரசேகர முழக்கம்

(எஸ்.நிதர்ஷன்,ந.லோகதயாளன்)

நான் தமிழ் மக்களுக்கு எதிரான வன் அல்லன். ஆனால், மாகாண சபை முறைமையை எதிர்க்கின்றேன்.

– இவ்வாறு பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரி வித்தார்

யாழ்.,வடமராட்சி கிழக்கு, மருதங் கேணியில் புதிதாக ☞ 2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறுவனங்களும், தனியாரும் யாழ்.செயலகத்துக்கு வழங்கிய பல லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை ஆட்டையைப் போட்டு, தனது நிவாரண அன்பளிப்பாகப் பொதுமக்களுக்கு விநியோகித்து அரசியல் லாபம் ஈட்டிய நம்ம அமுல் பேபியை யாழ் மக்கள் நன்கறிவர்.

'வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு அடித்த' அந்த சுத்துமாத்துக் குறித்து இன்னும் விசாரணைகள் சத்தம் சந்தடியின்றி நடக்கின்றன என்று தெரிகின்றது.

வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு அடிக்கும் அவரின் 'திருவிளையாடலில்' மற்றொரு அங்கம் புதிதாகக் கட்டவிழ்வது பற்றிய தகவல் இப்போது கசிந்துள்ளது.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடையாத – வறுமைக் கோட்டின் கீழ் உள்ள – ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கத் தீர்மானித்து அறிவித்ததும், தானே வடக்கில் அந்த நியமனத்துக்கான பொறுப்பாளர் என்று சுயநியமனம் செய்து கொண்டு காய் நகர்த்தினார். மக்களை அதைக் காட்டி நம்ப வைத்து, வேலை பெற்றுத் தருவேன் என்று கயிறு விட்டுத்தான் – மக்கள் தலையில் மிளகாய் அரைத்துத்தான் – வாக்கைச் சுருட்டித் தேர்வானார். கோட்டாவின் வேலைவாய்ப்பு அறிவிப்பு என்ற வழித் தேங்காயைப் பயன்படுத்தி, அதை தெருப் பிள்ளையாரான மக்களுக்கு அடிப்பதாகப் பாவனை காட்டி வாக்குகளைச் சுத்தினார். ஆனால் பொதுத் தேர்தல் முடிந்ததும் மேற்படி ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் வடக்கு, கிழக்கை மட்டும் புறமொதுக்கினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதனால், அந்த வேலைவாய்ப்பை நம்பி – அதற்குப் பொறுப்பேற்ற அமுல்பேபிக்கு வாக்களித்த யாழ்.மக்கள் அமுல் பேபி மீது கோபம் கொண்டனர். அமுல் பேபி அந்த நியமன விடயத்தில் ஏதும் கூற முடியாதவராகப் பம்மிக் கொண்டார். இன்னும் அந்தத் தாவா தீர்க்கப்படாமல் இழுபடுகின்றது.

இதற்கிடையில் வடக்கில் சுகாதாரத் தொண்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பிரச்சினை நீடித்தது. உண்ணாவிரதம், கவனவீர்ப்பு என்று அவர்கள் போராட்டம் நடத்த அதற்குள் தலையை நீட்டினார் அமுல் பேபி. அவர்களில் ஒரு சிலரைக் கொழும்புக்குக் கூட்டிச் சென்று ஜனாதிபதியை சந்திக்க வைக்கவும் முயன்றார். சரிவரவில்லை.

இதற்கிடையில், இந்த விடயத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்தார் டக்ளஸ் தேவானந்தா. அவரின் விடா முயற்சியாலும் அழுத்தத்தினாலும், இந்த சுகாதாரத் தொண்டர்களுக்கான நிரந்தர நியமனத்தை மேற்படி ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு அமைச்சரவையில் டக்ளஸிடம் இணக்கம் தெரிவித்தார் ஜனாதிபதி. அதற்கமைய உரிய அறிவுறுத்தல்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கும் வழங்கப்பட்டது.

இதற்கிடையில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இந்த விடயத்தை எடுத்தார் நம் அமுல்பேபி.

அந்த விடயத்தை ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தீர்க்க ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டு விட்டது என்று தெரிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய.

அவ்வளவுதான். வழித்தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு அடிக்கும் தனது கைங்கரியத்தை இதிலும் ஆரம்பித்து விட்டார் அமுல்பேபி.

தமது முயற்சியால்தான் அந்த நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவதாகத் தமது ஊடகம் மூலம் பறைசாற்றத் தொடங்கினார். அந்த சுகாதாரத் தொண்டர்களை அழைத்துத் தன்னால் – தன் மூலம் – அவர்களுக்கு நியமனம் கிடைப்பதாகத் தண்டோரப் போடும் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்து விட்டார். இன்று அல்லது நாளை அது நடைபெறவிருப்பதாகத் தெரிகின்றது.

அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் அமைச்சரவையில் தீர்மானம் எடுத்து, ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, வடக்கு மாகாண ஆளுநர் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நியமனங்கள் – பெரும்பாலும் வடக்கில் 836 பேருக்கு நியமனங்கள் – வழங்கப்படவுள்ளன.

ஆனால், அந்த 836 பேரினதும் அவர்களின் குடும்பத்தவரினதும் காதில் பூச்சுற்றி இன்னொரு நாலாயிரம் வாக்குகளைச் சுத்தலாம் என்று கணக்கிடுகின்றார் அமுல் பேபி...!

எனினும், இப்படி வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு உடைக்கும் கைங்கரியத்துக்கு இம்முறை இடமளிப்பதில்லை, உண்மையை வெட்ட வெளியாக்குவது என்பதில் டக்ளஸ் தரப்பு மிக உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது.

பார்ப்போம், தியேட்டரா? பெற்றோல் செற்றா...?

விடயம் சந்தைக்கு – சந்திக்கு – வராமலா விடும்...?

– மின்னல் –

## ஆயர் ஆற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம், வடக்கு, – கிழக்கு சிவில் சமூக சம்மேளனம், வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, பல்சமயங்களின் ஒன்றியம் – மட்டக்களப்பு, முதியோர் சம்மேளனம் – மட்டக்களப்பு, வெண்மயில் அமைப்பு – மட்டக்களப்பு, அமெரிக்கன் மிஷன் – மட்டக்களப்பு, சடோ லங்கா நிறுவனம் – மட்டக்களப்பு, அரச சாரா தொண்டு நிறுவனங்களின் இணையம், தமிழர் நலன் காப்பகம் – மட்டக்களப்பு, சிவகுரு ஆதீனம்–யாழ்ப்பாணம், தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு – மட்டக்களப்பு, புழுதி சமூக உரிமைக்கான அமைப்பு – திருகோணமலை, குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு, உலகத் தமிழர் மாணவர் ஒன்றியம், இராவண சேனை – திருகோணமலை, வடக்கு – கிழக்கு பொது அமைப்புகள் மற்றும் சம்மேளனங்கள் ஆகியன ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் வண. பிதா இராயப்பு ஜோசப் ஆண்டகை இயற்கை எய்திய செய்தியானது தமிழர் தேசத்தை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. ஆயரின் இழப்பானது தமிழர் தேசத்துக்கு அளவிட முடியாத ஒரு பேரிழப்பாகும். அவரின் இழப்பால் தமிழ்த் தேசியம் ஒரு சிறந்த தலைவனை இழந்து நிற்கின்றது. தமிழரின் உரிமைக்காக மதங்களை கடந்து தேசியத்தின் பால் ஓங்கி ஒலித்த குரலை தமிழர் தேசம் இன்று இழந்து நிற்கின்றது.

2009ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழர் தேசம் திக்கற்றவர்களாக நின்ற நேரம் அவர்களுக்கு நம்பிக்கை ஒளியாக விளங்கியவரே இராயப்பு ஜோசப் ஆண்டகை.

தமிழினத்தின் மீதான இனப்படுகொலையை, இறுதிப் போரில் கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கையை பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் பொது வெளியிலும் சர்வதேசத்திலும் அறுதியிட்டுத் தெரிவித்தவர்.

பாதிக்கப்பட்ட தமிழினத்தின் நீதிக் குரலாக, சாட்சியாக இருந்த மிகப்பெரும் ஆளுமையை நாம் இன்று இழந்து நிற்கின்றோம்.

ஆண்டகையின் மறைவையொட்டி அவரால் தமிழ்த் தேசியத்துக்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக இன்று (நேற்று) முதல் இறுதி வணக்க நிகழ்வு வரை வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தேசம் எங்கும் துக்க தினங்களாகவும், எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாகவும் பிரகடனபடுத்தப்படுத்துகின்றோம்.

இதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள், பொதுமக்கள் அனைவரும் ஆதரவு வழங்குவதுடன், திங்கட்கிழமை அனைவரும் தங்களின் வீடுகளிலும், பொது இடங்களிலும், வணிக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டும், உங்கள் உடைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்தும் துக்கத்தை வெளிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதே நாளில் தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசம் எங்கும் வாழும் தமிழ் மக்களும் கறுப்புப் பட்டி அணிந்து தங்கள் துக்கத்தை வெளிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

## நான் தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை நேற்று திறந்து வைத்தபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இன்று (நேற்று) வடக்கில் இரண்டு பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்காக நான் வந்துள்ளேன். மல்லாவி மற்றும் மருதங்கேணிப் பகுதிகளில் பொதுமக்களின் பிரச்சினைக ளைத் தீர்க்கும் முகமாக இரண்டு பொலிஸ் நிலையங்களைத் திறந்து வைத்துள்ளேன்.

தற்போது நாடு பூராகவும் 494 பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக இன் னும் 190 பொலிஸ் நிலையங்களைப் புதிதாக அமைக்கவுள்ளோம்.

அந்த வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் வடபகுதியில் இரண்டு புதிய பொலிஸ் நிலையங்கள் இன்று (நேற்று) திறந்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பொதுமக்கள் தூர இடங்களுக்குச் சென்று தமது பொலிஸ் சேவையைப் பெற்றுக் கொள்வதை நிறுத்த இதனைச் செய்துள்ளோம்.

நான் பொதுமக்களுடன் உரையாடும் போது பொதுமக்கள் இந்தப் பிரச்சினையை என்னிடம் கூறினார்கள். அதற்கு ஒரு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், இங்கே வேலையில்லாப் பிரச்சினைதான் இந்த மணல் கடத்தலுக்குக் காரணமாக இருக்கின்றது. எனவே, கல்வி கற்று வேலையில்லாமல் இருப்பவர்களுக்கும் மற்றும் கல்வியை இடையில் நிறுத்தி வேலையில்லாமல் இருப்பவர்களுக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இந்தச் சட்டவிரோத மணல் கடத்தலைத் தடுத்து நிறுத்த முடியும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து இந்தப் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு நான் யோசித்துள்ளேன்.

இளையோருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் அவர்கள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்த முடியும். எனினும், சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

புங்குடுதீவிலும் வெகுவிரைவில் புதிதாக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இன்று (நேற்று) ஆரம்பித்து இருக்கின்ற வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக அது அமைக்கப்படும்.

மாகாண சபை முறைக்கு சரத் வீரசேகர ஆகிய நான் எதிரானவன். அன்றும் எதிர்த்தேன்; இன்றும் எதிர்க்கின்றேன். நாளையும் இதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளேன்.

மாகாண சபை முறைமை இந்தியாவால் எமக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்று. மாகாண சபை முறைமை என்பது ஒரு தேவையற்ற ஒரு விடயமாகும். ஒன்பது மாகாண சபைகள் காணப்படும்போது அவற்றுக்குத் தனியான நிர்வாகம் காணப்படும். மத்திய அரசு தனியாகச் செயற்பட வேண்டி வரும். ஆனால், மத்திய அரசு என்பது ஒன்றுதான். ஒன்பது மாகாண சபைகளுக்கும் தனியான நிர்வாகம் இருக்க முடியாது.

ஆனால், இந்த அரசு மாகாண சபை முறைமை வேண்டும் எனத் தீர்மானிக்குமானால் அந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கப் போவதில்லை. வடக்கில் மாகாண சபை இல்லாது போய் மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. தற்போது அபிவிருத்தி தடைப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த முறை வடக்கு மாகாண சபையில் ஆட்சியில் இருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், மத்திய அரசால் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் அரைவாசி நிதியைப் பயன்படுத்தாது திறைசேரிக்கு திருப்பி அனுப்பியுள்ளார். இந்த நிலைமைதான் இங்கே காணப்படுகின்றது.

ஆகவே, மாகாண சபை என்பது மக்களுக்குப் பிரயோசனமான ஒரு விடயமாக அமைய வேண்டும்.

எனினும், வடக்கு மக்கள் மாகாண சபையை விரும்புகின்றார்கள். அது அரசியல் காரணமாக இருக்கலாம். ஆனால், சரத் வீரசேகர ஆகிய நான் தனிப்பட்ட ரீதியில் மாகாண சபை முறைமைக்கு எதிரானவன்.

எனினும், அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தீர்மானித்தால் அரசின் தீர்மானத்துக்கு ஏற்றவாறு நான் செயற்படத் தயாராக உள்ளேன். நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன். அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்த விரும்பினால் அதை நடத்தலாம். ஆனால், தனிப்பட்ட ரீதியில் நான் மாகாண சபை முறைமைக்கு எதிரானவன் – என்றார்.

## ஜோசப் ஆண்டகையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது மன்னார் ஆயர் இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஆயரின் உடலுக்கு அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட மன்னார் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களும் இணைந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நாளை பிற்பகல் 3 மணியளவில் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. நாளைமறுதினம் பிற்பகல் 2 மணி வரை அங்கு அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 3 மணியளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதன்போது இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

இதன்பின்னர் ஆயரின் உடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

## மக்களின் துயரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டகை, நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை, முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

இத்தாலியில் உள்ள பரப்புரைக் கல்லூரியில் திருமறைச் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்ற இராயப்பு ஜோசப் ஆண்டகை, 1967 இல் குருவானவராக தனது பணியை ஆரம்பித்தார்.

1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டு, 1992 ஒக்டோபரில் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மனிதாபிமான நடவடிக்கையின்போது நாட்டில் அமைதியைக் ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவிருந்தது. அந்தவகையில் போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும், ஏழை மக்களுக்கு உதவவும் அவர் அரும்பாடு பட்டார்.

மடு அன்னை தேவாலயத்தை பாதுகாப்பதற்கான இராயப்பு ஜோசப் ஆண்டகையின் அர்ப்பணிப்பை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றுள்ளது.

## யாழில் பிரபல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அன்பொளி கல்வியகத்தில் கல்வி பயில்வதற்காக ஆண்டு தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் திரண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்பொளி புலமைப்பரிசில் மாதிரி மற்றும் வழிகாட்டிகள் நாடளாவிய ரீதியில் தமிழ் மாணவர்கள் மத்தியில் கூடுதல் வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல்களை குறைபாடுகளுடன் நடத்தினால் எதிர்காலத்தில் முரண்பாடுகள் வரும்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தல் வெகு விரைவில் நடத்தப்படும். நல்லாட்சி அரசாங்கம் அரசமைப்பிற்கு முரணாக செயற்பட்டமையைப் போன்று தற்போதைய அரசாங்கமும் அரசமைப்பிற்கு முரணாகச் செயற்பபாது. மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது அவசியமானதாகும். குறைபாடுகளுடன் தேர்தலை நடத்தினால் எதிர்காலத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் மாகாண சபை அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

மாகாண சபைகளின் ஊடாக முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் உச்ச பயனை நாட்டு மக்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். 1000 கோடி நிதி ஒன்பது மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் சிறந்த முறையில் நிறைவு பெறவில்லை. மாகாண சபைகளின் செயற்பாடு இனிவரும் காலங்களில் மாகாண சபை அமைச்சால் நேரடியாக கண்காணிக்கப்படும்.

அபிவிருத்திப் பணிகள் மாகாண சபைகளினாலும், மத்திய அரசாங்கத்தினாலும் . இருவேறுபட்ட திட்டமிடலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் பெருந்தொகையான நிதி வீண்விரயமாக்கப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் மாகாண சபைகளை மையப்படுத்தி மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே, அபிவிருத்திப் பணிகளின் உச்ச பயனை நாட்டு மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல் மாகாண சபை தேர்தலை வெகுவிரைவில் நடத்துவோம். நல்லாட்சி அரசாங்கத்தைப் போன்று அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட வேண்டிய தேவை கிடையாது. மாகாண சபைகளுக்கு மக்களின் பிரநிதிகள் ஜனநாயக முறைக்கமையத் தெரிவு செய்யப்படுவார்கள். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி மாகாண சபைகளைச் சிறந்த முறையில் செயற்படுத்துவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். அதே போல் அபிவிருத்திப் பணிகளின் பெறுபேற்றை நாட்டு மக்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களில் மாகாண சபைகளின் ஊடாக முறையான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. அனைத்து மாகாணங்களுக்கும் 100 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மலசல கூடங்களைப் போன்று பெயரளவிலான அபிவிருத்திப் பணிகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அபிவிருத்திகள் வெறும் காட்சிப் பொருளாக மாத்திரம் காணப்படுகின்றன.

தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு அனைத்து தரப்பினருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தில் மக்களின் வரிப்பணத்தை வீண்விரயமாக்குவதற்கு இடமளிக்க முடியாது. கிராமப்புற மக்கள் சுட்டிக்காட்டியுள்ள அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாகச் செயற்படுத்துவது தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அபிவிருத்திப் பணிகளை எக்காரணிகளுக்காகவும் இடைநிறுத்த கூடாது.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. வகுத்துள்ள திட்டங்களை மாகாண சபைகள் முறையாகச் செயற்படுத்த வேண்டும். மாகாண சபைகளில் காணப்படும் அடிப்படைக் குறைபாடுகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும். – என்றார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில்

இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் கல்வி நிதியத்தால் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதற்காக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் புலமைப்பரிசில்கள் க.பொ.த.உயர்தரம், பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் இலங்கையின் ஏதேனும் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கானவையாகும் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் (குறைந்தது 6 திறமைச் சித்திகளுடன்) சித்தியடைந்த அல்லது உயர் தரத்தில் சித்தியடைந்த 25 வயதுக்குக் குறைந்தவர்கள் இந்தப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ், க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர் தரப்பரீட்சைப் பெறுபேற்றுத்தாள்கள், பெற்றோர்களது சமீபத்தைய சம்பளத்தாள் விவரம் மற்றும் பெற்றோரது வேலை தொடர்பாகத் தோட்ட அத்தியட்சகரினது அத்தாட்சி என்பவற்றின் பிரதிகளுடன் இணைந்ததாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை இந்திய உயர் தூதரகம் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்களை இந்திய உயர்தூதரகம், 36 – 38 காலி வீதி, கொழும்பு 3 மற்றும் இந்திய பிரதி உயர் தூதரகம் , இல. 31, ரஜபிகில்ல மாவத்தை, கண்டி ஆகிய இடங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் இம்மாதம் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும் என்று இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# போதைப் பொருள்களுடன் வவுனியாவில் ஐவர் கைது

வவுனியாவில் போதைப் பொருள்களுடன் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாரின் விசேட நடவடிக்கையின் போது வவுனியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்களிடம் இருந்து ஹெரோயின் மற்றும் கஞ்சா என்பன மீட்கப்பட்டன.

இதில் வைரவப்புளியங்குளம் பகுதி மற்றும் சிவபுரத்தைச் சேர்ந்த இருவர்களிடமும் இருந்து 620 மில்லிக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மற்றைய மூவரிடம் இருந்து 04 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




கிறிஸ்து இயேசுவின் பாடுகள், மரணம் கிறிஸ்தவர்களுக்கு துயரமாக இருந்தபோது அவரது இறப்பை எண்ணி எக்காலமிட்டு குதூகலித்தவர்கள் வெற்றிக் களிப்புடன் சாத்தானின் சீடர்களாக வெறிகொண்டு அலைந்ததை முன்னோர் அல்லேலூயா அல்லேலூயா என வீதிகளில் இறங்கி வெற்றி விழாக்கள் என இழப்பினை களியாட்டமாக்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஒருபுறம் இழப்பின் துயரில் மூழ்கிய மக்கள் கூட்டம் துயர நாள்களாக நினைவு கூற மறுபுறம் வெற்றி விழாக்களாக இறப்பினை கொண்டாடிய நினைவுகள் எல்லாம் முடிந்தது இனி சாத்தானின் ஆட்சிதான் எதையும் செய்யலாம் என்ற மமதை கொண்டவர்கள் போல் நிலை மறந்து சாத்தானின் தூதர்களாக வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டதை வரலாறு கூறும்.

இயேசுவின் சாவு ஓர் இழப்பு அல்ல மாறாக அது ஒரு புதுவாழ்வின் பிறப்பு என்பதை இன்று இயேசுவின் வாழ்வை சிலுவையில் எம்வாழ்வை மீட்க தன் வாழ்வை அனைவருக்காகவும் கையளிக்கின்றார். ஒருவர் உணராமல் எக்காளமிட்டவர்கள் மத்தியில் அவமானம் நிறைந்த சாவையும் பார்க்கலாம். ஆனால் இன்னு மொருவர் அந்த சிலுவையில் மறைந்திருக்கும் மீட்பையும், மகிமையையும், வல்லமையையும் அது கொண்டு வரும் மகிழ்ச்சியையும் பார்க்க முடியும். உண்மையாக நாம் சிலுவையை பார்க்கின்ற விதத்திலேதான் அச்சிலுவை எமது வாழ்விற்கு கொண்டு வரும் வாழ்வையும், விடுதலையையும் அனுபவிக்க முடியும். விசுவகிக்கும் எமக்கு கடவுளின் வல்லமையாக மாற விசுவகிக்கும் வல்லமை வேண்டி இறை சன்னிதியில் சங்கமமா வோம்.

நம்பிக்கை உடையவர்கள் காலம் தாழ்த்தாலும் விடுதலை அடைவர், ஏமாற்றி பிழைப்போர் தம் துரோகத்தனத்தால் வாழலாம் என்பதை காலங்கள் பதில் சொல்லும் என்பதை பல்வேறு நிலைகளில் கற்றுக் கொண்ட பாடங்களாகின.

இறப்பு வாழ்வின் முடிவல்ல உயிர்பின் மீது நம்பிக்கை உடையோருக்கு புதுவாழ்வு, புதுபயணம், புதிய பாதையாக்க எம் நம்பிக்கை செயல்களால் துவண்டு வாழும் மனங்களை துயர் துடைக்கும் பணிகளால் புதிய பாதையில் பயணிக்க நம்பிக்கை ஊட்டும் கரங்களால் இறைவனின் துணையுடன் பயணிப்போம்.

– கலாபூஷணம் செ.யோசப்பாலா.

# ஜனாதிபதியின் ஆலோசகர் எனக்கூறி பணம் வசூலித்த நபர் கைதானார்

*கவுன்ஸிலர் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகராகத் தன்னை அடையாளம் காட்டி, தனி நபர்களிடமிருந்து பணம் வசூலித்தமைக்காக கொழும்பு, பொரளை பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*பேஸ்லைன் பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*நிலம், வீடுகள் மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதன் அடிப்படையில் இவர் தனி நபர்களிடமிருந்து பணம் வசூலித்துள்ளார் என ஆரம்பக் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இந் நிலையில் சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.*

# பண்டாரநாயக்க விமான நிலைய பி.சி.ஆர். தொடர்பான பேச்சு வெற்றிகரமாக நிறைவு



கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்தில் உள்ள பி.சி.ஆர்.ஆய்வக இடமாற்றம் தொடர்பாக இலங்கை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்துடன் கடந்த வியாழக்கிழமை சுற்றுலா அமைச்சில் சிறப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய அதிகாரிகளும், விமான நிலையம் மற்றும் விமான நிறுவனத்தின் தொடர்புடைய அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது ஆய்வகத்தை மிகவும் பயனுள்ளதாக இடம் மாற்றுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.

இது தொடர்பாக தேவையான உதவிகளை வழங்க ரவி குமுதேஷ் தலைமையிலான இலங்கை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஒப்புக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமெ. எழுப்பும் அலாரம்

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்னைய ஆண்டுகளில் இலங்கை தொடர்பாகக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மான வாசகங்களுக்கும் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகங்களுக்கும் இடையில் மிக முக்கிய வேறுபாடு ஒன்று உள்ளது.**

**முன்னையத் தீர்மான வாசகங்கள் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் பற்றியே அதிகம் விவரித்தன.**

**இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட அத்துமீறல்களுக்கு மேலதிகமாக இப்போது – தற்போதைய அரசின் காலத்தில் – இடம்பெறுபவை எனக் கருதப்படும் மீறல்கள் குறித்தும் பிரஸ்தாபிக்கின்றது.**

**கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயம் எரிக்க வேண்டும் என்று – உலக நியதிக்கு மாறாக – உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களுக்கு முரணாக – இலங்கை மருத்துவ சுகாதார நிபுணர்களின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட அரச பேரினவாத வெறி நடவடிக்கையில் தொடங்கி, அநாகரிகமான, மிருகத்தனமான, கொடூரச் சட்டம் என விவரிக்கப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதன் மூலம் தொடர்ந்தும் மோசமான மனித உரிமை மீறல்களை முன்னெடுக்கின்றமை வரை பல்வேறு அத்துமீறல், அராஜக நடவடிக்கைகளுக்கான குற்றச்சாட்டு கோட்டா அரசு மீது சுமத்தப்படுகின்றது.**

**மேற்கு நாடுகள் இது விடயத்தில் இலங்கையில் அதிகாரத்தில் இருக்கும் ஆட்சிப் பீடத்தை ஒரு 'பயங்கரவாத அரசு' போன்றே கருதுகின்றன என்பது பல மட்டங்களில் வெளிப்பட்டு வருவது கண்கூடு.**

**இலங்கை நிலைவரம் தொடர்பாக – இங்குள்ள மனித உரிமைகள் நிலைமை சம்பந்தமாக – அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையிலும் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.**

**அந்த அறிக்கையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களில் மற்றொன்று இலங்கையில் ஊடகவியலாளரின் சுதந்திரம் பல வழிகளில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கியுள்ளது என்பதாகும்.**

**கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகாரத்தில் முதலில் பலியாவது 'உண்மை'தான். அந்த உண்மையை வெளிப்படுத்துவதன் காரணமாக இவ்விடயத்தில் முதலில் சிக்குபவர்கள் ஊடகவியலாளரே.**

**உண்மைகளை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளரின் பேனாக்களை முறிக்க, கமராக்களை சிதைக்க, கோட்டா ஆட்சிப் பீடம் இலகுவாக ஏவும் அம்புதான் பயங்கரவாதத் தடைச் சட்டம்.**

**இந்த மனிதாபிமானமற்ற – மிருகத்தனமான – சட்டத்தின் கீழ் சுதந்திர ஊடகவியலாளர்கள் இலகுவாக 'பயங்கரவாதிகள்' பட்டத்துக்கு இலக்காகி, கணக்கு, வழக்கின்றி தடுத்து வைக்கப்பட்டு அவர்களின் செயற்பாடுகள் முடக்கப்படும் ஆபத்து அதிகம் உள்ளது. அதை விலாவாரியாக விவரிக்கின்றது அமெரிக்க அறிக்கை.**

**யுத்த காலத்தில் இந்த வகையில், கோட்டாவின் நிர்வாகத்தில் பல டசின் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் குரல்கள் நசுக்கப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர். பலர் தாக்கி சித்திரவதை செய்யப்பட்டனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். தப்பிப் பிழைத்தவர்களும், அச்சுறுத்தலுக்கு உள்ளானோரும் நாட்டை விட்டுத் தப்பி ஓடினர்.**

**படுகொலை செய்யப்பட்ட அல்லது மோசமாகத் தாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட எந்தத் தமிழ் ஊடகவியலாளரின் விடயத்திலும் உண்மை கண்டறியப்படவில்லை. நியாயமான புலன் விசாரணைகள் நடத்தப்படவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை. பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை. கோட்டா தர்பாரில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான கொடூரங்களைப் புரிந்த எந்தப் படைத் தரப்பும் தண்டிக்கப்படவேயில்லை. அவர்கள் தாராளமாக, சுதந்திரமாக நடமாடுகின்றனர்; இலங்கை 'தேசத்தை மீட்ட சுதந்திர வீரர்களாக' வேறு போற்றப்படுகின்றார்கள்.**

**அது மாத்திரமல்ல, யுத்த காலத்தில் ஊடகவியலாளர்கள் மீதான அட்டூழிய அடக்கு முறைகளுக்கு கட்டளைச் சங்கிலி** (Chain of Command) **அடிப்படையில் பொறுப்பேற்க வேண்டிய முன்னாள் படை அதிகாரிகளின் கைகளில் இப்போதைய சிவில் நிர்வாகத்தின் பல பொறுப்புகளும் தாராளமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.**

**ஊடக சுதந்திரத்தை மதிக்க வேண்டிய கடப்பாட்டில் மிக மோசமாக நடந்த படைத் தரப்பு ஒருபுறம், அந்தப் படைத் தரப்பை அத்துறையில் வழிப்படுத்தியோரின் கைகளில் அரசியல் அதிகாரமும் சிவில் நிர்வாக அதிகாரமும். இந்தப் பின்புலத்தில் மீண்டும் ஊடக சுதந்திரம் மோசமாகப் பந்தாடப்படும் சூழல் இறுக்கமடைந்து வருகின்றது. இதுவே, அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்ட இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கையில் எச்சரிக்கை அலாரம் எழுப்பப்பட்டமைக்குக் காரணம்.**

**தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் பற்றிய செய்தியை வெளியிட்டமைக்கான யாழ்ப்பாண நாளிதழ் மீது அரசின் பொலிஸ் கரங்கள் பாய்ந்ததன் பின்னணியும் இதுதான்.**

**ஊடகத்துறை மீண்டும் இருண்ட யுகத்தை சந்திக்கத் தயாராக வேண்டும் என்பது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது.**

# ஜெனிவாவின் அறிக்கைக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## அழைக்கிறார் அமைச்சர் பீரிஸ்



ஜெனிவா தீர்மானங்களுக்கு எதிராக படைவீரர்களை காப்பாற்ற மற்றும் நாட்டின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாப்பதற்காக ஒரு நாடாக இலங்கையர்கள் ஒன்றுபட வேண்டும் என அரசாங்கம் அறிவிப்பு விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 12 மணி நேரத்திற்குள், இலங்கையைப் பற்றி அறிய 13 புதிய நியமனங்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

இந்த அறிக்கைகளில் உள்ள வெளிப்படைத்தன்மை தொடர்பாகக் கேள்வியெழுப்பிய எதிர்க்கட்சிகள் கூட நாட்டுக்காக நிற்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் 10 ஆண்டுகளாக நடைமுறையில் இல்லாத சட்டங்களை உருவாக்க, திருத்த அல்லது மாற்ற வேண்டிய நேரம் இது என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

# ஈஸ்டருக்கு அதிகபட்ச பாதுகாப்பு உத்தரவாதம்

## இராணுவத் தளபதி

ஈஸ்டர் ஞாயிறு கொண்டாட்டத்துக்காக மக்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சமூக இடைவெளி மற்றும் பிற சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் ஆராதனைகளில் பங்கேற்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு தேவாலயத்துக்கும் தனித்தனியே பாதுகாப்பு வழங்குவது மிகவும் கடினம் என்பதால் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவமும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர் என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும் பாதுகாப்பை வழங்கும் செயற்பாடுகள் இந்த வார தொடக்கத்தில் இருந்து அடுத்த இரண்டு நாள்களுக்கு அமுல்படுத்தப்படும் என்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

# 25 வருட சேவையில் விமானப்படை உபாயமார்க்க சிறப்புப் படைப் பிரிவு



நாட்டின் நலன் கருதி பல்வேறு சேவைகளையாற்றிவரும், விமானப்படையின் இலக்கம் - 8 உபாயமார்க்க போக்குவரத்து படையணியின் 25 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடுவதாக விமானப் படையின் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப்படையின் இலக்கம் – 8 உபாயமார்க்க போக்குவரத்து படையணியானது, வை – 12 போக்குவரத்து விமானங்கள் மற்றும் பி – 200 கண்காணிப்பு விமானங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இந்த படையணி , 2011 ஆம் ஆண்டு விமானப் படையின் உள்ளக விமான பயணங்களுக்கான வசதிகளை வழங்கிவரும் ஹெலிக்கொப்டர் சேவை யின் கீழ் எம்.ஏ - 60 என்ற பயணிகள் விமான சேவையையும் அறிமுகப்படுத்திவைத்திருந்தது. இதனூடாக இந்த படையணி மேலும் வரவேற்பை பெற்றிருந்தது.

தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பதிரண, இந்த விமானங்களை வழிநடத்துபவராகவும் , அதற்கான ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளமையுடன், விமானப்படையின் முன்னாள் தளபதிகள் பலர் இந்த விமானங்களின் வழிகாட்டிகளாகச் செயற்பட்டுள்ளனர்.

உள்நாட்டு யுத்தத்தின் போது, விமானப் படையின் தாக்குதலுக்கான விமானங்களில் குறைபாடு ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் , வை –12 ரக விமானங்கள் தாக்குதல்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இலக்கம் - 8 படையணிக்குச் சொந்தமான பிசி கிங் எயார் பி - 200 விமானம் பிரபுக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் , 1996 ஆம் ஆண்டுகளில் புலனாய்வு தகவல்களை அறிந்து கொள்ளக் கூடிய உபகரணங்கள் பொருத்தப்பட்ட மற்றும் இரவு, பகல் வேளைகளில் செயற்பாட்டில் இருக்கக் கூடிய கமராக்களும் பொருத்தப்பட்டது.

இந்த விமானத்தினூடாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அரசியல் மட்டத்தில் மட்டுமன்றி யுத்த பொறிமுறைகள் உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் பயன்படுத்தப்பட்டது.

இந்த படையணிக்குச் சொந்தமான விமானங்கள் ஊடாக படைவீரர்கள் அழைத்துச் செல்லப்பட்டமையுடன், பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்நிலையில், தற்போது வான் மேற்பார்வை நடவடிக்கைகள், விசேட பிரபுக்கள் போக்குவரத்து, சோதனை நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பகிர்ந்தளித்தல், சிவில் நபர்களுக் கான உள்ளூர் பயண வசதிகளை வழங்கல், செயற்கை மழையை உருவாக்குவதற்கு மற் றும் ஆய்வுரீதியான வேலைத் திட்டங்கள் உள் ளிட்ட செயற்பாடுகளுக்காவும் பயன்படுத்தப் படுகின்றது.

தற்போது 25 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடிவரும் இந்த படையணி , 25 வருட காலமாக நாட்டின் நலனுக்காக பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளது.

படையணியின் தற்போதைய கட்டளைத் தளபதியாக குரூப் கப்டன் புஜன குணதிலக்க செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபையால் ஆளும் கட்சிக்குள் குழப்பம் உறுப்பினர்கள் சிலர் வழக்கு தொடரத் தீர்மானம்

## காரணத்தை வெளியிட்டார் அமைச்சர் லொக்குகே

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் எல்லை நிர்ணய விவகாரம், தேர்தல் முறைமை உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் பெரும்பாலானோர் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த இணக்கம் தெரிவித்துள்ளார்கள். என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக முன்வைத்த யோசனை தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்கள்.



மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என குறிப்பிட்டு ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் எல்லை நிர்ணயம், தேர்தல் முறைமை ஆகிய காரணிகளை முன்வைத்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளார்கள்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் பெரும்பாலான உறுப்பினர்கள் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையின் கீழ் நடத்த இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள மாறுபட்ட கருத்துக்கள் அனைத்தும் முழுமையாக பரிசீலனை செய்யப்படும்.

உரிய காலத்தில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றிருந்தால் தற்போது இந்த நெருக்கடி நிலை தோற்றம் பெற்றிருக்காது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபையின் நிர்வாகம் முன்னெடுக்கப்படுகின்றமை ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முரணானது .

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு மகாசங்கத்தினர் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்த யோசனை தொடர்பில் ஜனாதிபதி மகா சங்கத்தினருடன் இடம்பெறும் சந்திப்பின் போது தீர்மானத்தை அறிவிப்பார். நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

மாகாண சபைத் தேர்தலை அரசியல் காரணிகளுக்காக பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. மாகாண சபைத் தேர்தல் எத்தேர்தல் முறையில், எப்போது இடம் பெற்றாலும் பொதுஜன பெரமுன நாடளாவிய ரீதியில் வெற்றிபெறும் என்பதை உறுதியாகக் குறிப்பிடமுடியும். – என்றார்.

# வீடு புகுந்து அறைக்குள் குழி தோண்டி தேடுதல் நடத்திய சிவில் உடைக் குழு





யாழ்ப்பாணம்,ஏப்.02

நல்லூர் சங்கிலியன் வீதியில் உள்ள ஓர் வீட்டிற்கு சிவில் உடையில் சென்றோர் தம்மை இராணுவம் எனத் தெரிவித்து எந்தவொரு அனுமதியும் பெறாமல் பலவந்தமாக வீட்டிற்குள் குழி தோண்டி சோதனையில் ஈடுபட்டமை தொடர்பில் சர்ச்சை எழுப்பப்படுகின்றது.

சங்கிலியன் வீதியின் குறுக்கு வீதியில் உள்ள ஓர் வீடு தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் புலிகளின் முகாமாக இருந்ததால் அந்த வீட்டிற்குள் புதைக்கப்பட்ட நிலையில் மர்மப் பொருள்கள் இருக்கின்றன எனத் தெரிவித்து நேற்றுமுன்தினம் காலையில் சிவில் உடையில் சென்ற சிலர் தம்மை இராணுவத்தினர் என அடையாளப் படுத்தி வீட்டின் ஓர் அறையில் நிலத்தை உடைத்துக் குழி தோண்டியுள்ளனர்.

இவ்வாறு குழி தோண்டியவர்கள் ஏதும் மீட்டனரா, இல்லையா என்பது தெரியாத நிலையில் வீட்டில் இருந்த சிலர் தாம் குடியிருக்கும் நிலையில் இவ்வாறு படையினர் தோண்டுவதற்கு கிராமசேவகரிடம் தெரியப்படுத்தப்பட வேண்டும், அத்துடன் பொலிஸாரை அழைத்து வர வேண்டும், இவை இல்லாதுவிடின் சீருடையில் படையினரை அழைத்து வர வேண்டும் என வற்புறுத்தியபோது குழி தோண்டிய படையினர் முழுமையாக அகன்று சென்றனர். அதனால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்ப்பாணப் பொலிஸார் நீண்ட நேரம் விசாரணைகளில் ஈடுபட்டனர். எனினும் செய்தியாளர்கள் எவரும் அச்சமயம் அனுமதிக்கப்படவில்லை.

# பாகிஸ்தான் - இலங்கை இராணுவ கூட்டுப் பயிற்சிகள் நிறைவடைந்தன





கொழும்பு, ஏப்.03

எதிரிகளின் மறைவிடங்களை மறைந்திருந்து தாக்குவது தொடர்பில் கஜபாகு படையினர் மற்றும் பாகிஸ்தான் படையினர் இணைந்து 15 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட 'ஷேக் ஹேண்ட்ஸ் – 1 கள பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன என இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கான இறுதி ஒத்திகை நிகழ்வுகள் அண்மையில் சாலியபுரவில் இடம்பெற்றதுடன், இந்நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகரும் 'ஷேக் ஹேண்ட்ஸ்' பயிற்சிகளின் திட்ட வடிவமைப்பாளருமான மேஜர் ஜெனரல் (ஓய்வு) முஹம்மட் சஷாத் கட்டாக் மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை இராணுவத்தின் பன்முகத் திறன்கள், உள்ளக போர் தந்திரோபாயங்கள், எதிரிகளுக்கு எதிரான தாக்குதல் உபாயங்கள், நவீன பயிற்சி முறைகள் என்பன உள்ளடங்கியிருந்ததுடன் இந்த பயிற்சிகள் முதல் முறையாக கஜபாகு படையணி தலைமையகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பயிற்சியில் பாகிஸ்தான் இராணுவத்தின் 06 அதிகாரிகள் மற்றும் 35 சிப்பாய்களும், இலங்கை இராணுவத்தில் கஜபாகு படையணியின் 4 அதிகாரிகள் மற்றும் 40 சிப்பாய்களும் பங்கேற்றனர் என்று இராணுவ ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# கைக் குழந்தையுடன் கிணற்றில் குதித்த தாய்

## குழந்தை பரிதாபமாக பலி

இளம் வயது தாயொருவர், தனது கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டு கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயற்சித்த நிலையில், குழந்தை உயிரிழந்த நிலையில், தாய் காப்பாற்றப்பட்ட சம்பவமொன்று மஹியங்கனை பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் அந்த இளம் தாய்க்கும், அவரது கணவருக்குமிடையில் குடும்பப் பிரச்சினையொன்றின் காரணமாகக் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து, மன வேதனை அடைந்த தாய் தனது பதினைந்து மாத ஆண் குழந்தையையும் தூக்கிக் கொண்டு, கிணற்றில் குதித்து தற்கொலை செய்ய முயன்றுள்ளார். இதன்போது குறித்த சம்பவத்தைக் கண்ட அயலவர்கள் ஓடிச் சென்று, அந்த கிணற்றில் இருந்து தாயையும், குழந்தையையும் மீட்டனர்.

இதையடுத்து மீட்கப்பட்ட இருவரும் உடனடியாக மஹியங்கனை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், மீட்கப்பட்ட கைக் குழந்தை இறந்து விட்டது எனவும், ஆனால் குழந்தையின் தாயைக் காப்பாற்ற முடியுமென்றும் தெரிவித்தனர்.

மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த மாப்பாகடவெள கிராமத்தைச் சேர்ந்த 29 வயதுடைய தாய் அவரது பதினைந்து மாதங்கள் நிரம்பிய ஆண் குழந்தையையும் தூக்கிக் கொண்டே, அவர்களது வீட்டுக் கிணற்றில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பாக, மஹியங்கனைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 28 ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெயுடன் தம்புள்ளையில் லொறி ஒன்று பறிமுதலானது

*கொழும்பு, ஏப்.03*

*தம்புள்ளை பகுதியில் தரமற்ற தேங்காய் எண்ணெய் கொண்டதாக சந்தேகிக்கப்படும் கொள்கலன் லொறியொன்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.*

*கடந்த வியாழன் இரவு 7.30 மணியளவில் தம்புள்ளை பொருளாதார மையத்துக்கு அருகிலுள்ள ஒரு தனியார் கிடங்குகளில் பவுஸர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதே 28 ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெயுடன் குறித்த லொறி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.*

*தம்புள்ளை மேயர் ஜாலிய ஓபாத, பொலிஸ் தலைமையக ஆய்வாளர் எஸ்.பி. எதிரிசிங்க மற்றும் பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டனர்.*

*இந் நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மனித நுகர்வுக்கு தரம் வாய்ந்ததா என்பதைக் கண்டறிய அவற்றின் மாதிரிகள் பெறப்பட்டு, ஆய்வக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** கடந்த வாரம் அமரபுர மஹா நிக்காய மகாநாயக்க தேரரின் மறைவையொட்டி அரசாங்கம் நாடுபூராகவும் துக்கதினத்தை அறிவித்திருந்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** பாராட்டவேண்டிய விடயம்தான். துறவிகளுக்கு முதன்மை கொடுப்பதைத் தமிழர் பண்பாடும் ஏற்கிறது. அதனால்த்தான் நம் வள்ளுவக் கடவுளார் தன் நூலின் ஆரம்பத்திலேயே 'நீத்தார் பெருமை' எனும் அதிகாரத்தை அமைத்திருக்கிறார்.

ஆனால் ஒன்று, துறவை நாம் உண்டாக்கக்கூடாது. அது ஆன்ம பக்குவத்தால் தானாக உண்டாக வேண்டும். சமயங்களெல்லாம், என்றைக்குத் துறவையும் நிர்வாகமயப்படுத்தத் தொடங்கினவோ அன்றைக்கே துறவின் புனிதம் போய்விட்டது. நான் எல்லா மதத்தாரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். இஸ்லாமிய மதம் மட்டும் இவ்விடயத்தில் விலகி நிற்கிறது. துறவிகளை அருளின் குறியீடாய்க் காணவேண்டுமே தவிர அரசியலின் குறியீடாய்க் காணலாகாது. மறைந்த துறவி பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. மேலே நான் சொன்ன அருட்தகுதி அவருக்கு இருந்திருந்தால் ஒரு நாளென்ன இரண்டு நாள்கூட அவருக்காய் தமிழர்களும் சேர்ந்து துக்கதினம் கொண்டாடலாம்.

இவ்விடத்தில் மனத்தினுள் எழும் கேள்வி ஒன்றைக் கேட்காமல் இருக்கமுடியவில்லை. துறவிகளுக்கு மதிப்பளிக்கும் விடயத்தில் அரசு பௌத்த துறவிகளுக்கு மட்டுமாய் அம்மதிப்பை வழங்குவது ஏன்? இதுவே என் கேள்வி. அரசு, அந்த மரியாதையை மற்றைய மதத்துத் துறவிகளுக்கும் வழங்கக் கடமைப்பட்டிருக்கிறதல்லவா? ஆனால் அது நடப்பதாய்த் தெரியவில்லை. நல்லை ஆதீன முதல் குருமுதல்வரோ, சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியோ மறைந்தபோது இத்தகைய மரியாதையை அரசு செய்திருக்க வேண்டியது அவசியமல்லவா?

இதே போலத்தான் சிறந்த சிங்களப் பாடகர் அமர தேவா மறைந்த போதும் அரச அளவில் மரியாதை செய்தார்கள். இந்த மரியாதையை உலக அளவில் புகழ் பெற்றிருந்த எங்களது தவில் வித்துவான்கள் தட்சணாமூர்த்தி, சின்னராசா, நாதஸ்வர வித்துவான் பத்மநாதன் போன்றவர்களுக்கு அவர்கள் வழங்கவில்லை.

இந்த நாடும் அரசும் எல்லா இனத்தார்க்கும், எல்லா மதத்தார்க்கும் உரியதென்றால் இந்தப் பாரபட்சத்தை அவர்கள் எப்படிச் செய்யமுடியும்? இது நியாயமாகுமா? எங்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தகைய சம உரிமைகளைக்கூடக் கோராமல் அங்கு என்னதான் செய்து கொண்டிருக்கிறார்கள்? இவர்கள் நாடாளுமன்றத்தைப் பசி தீர்க்கும் இடமாய் மட்டும் கருதுகிறார்களோ என்னவோ?

அரசின் இந்தப் பாரபட்சம் தான் இன, மத பேதங்களை உருவாக்குகிறது. இனிமேலேனும் இவர்கள் மாறுவார்களா?

உலகநாதரின் ஒப்பீனியன் * **'உண்மையிலே இதுதான் நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே' ஹி...ஹி...**

*****

**2. கேள்வி:-** ஐ.நா. மனிதஉரிமைச் சபை தீர்மானத்தால் நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று ஆட்சியாளர்கள் சொல்லி வருகிறார்களே?

**பதில் :-** உண்மையிலேயே பாதிப்பில்லை என்றால், போன மாதம் முழுவதும் உலகத் தலைவர்களிடம் ஆதரவு கோரி இவர்கள் ஆலாய்ப் பறந்து திரிந்தது எதற்காகவாம்? 'ஊரொடு பகைக்கின் வேரொடு கெடும்' என்பது தமிழ்ப் பழமொழி. இவர்கள் உலகத்துடனேயே பகைக்க நினைக்கிறார்கள். அச்சமாக இருக்கிறது.

உலகநாதரின் ஒப்பீனியன் * **'உலகத்தார் உண்டென்ப இல்லென்பான் வையத்து அலகையாய் வைக்கப்படும்'. அலகை என்றால் பேயாம். வள்ளுவருக்கு ஒரு சல்யூட்!**

*****



**3. கேள்வி:-** உலகநாடுகளிடம் இருக்கும் மனிதாபிமானத்தினால்தானே எங்களைப் போன்ற சிறிய இனத்திற்காகவும் ஐ.நா. மனித உரிமைகள் சபை குரல் எழுப்புகிறது. உலகத்திற்கு நாம் பெரிய கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா?

**பதில் :-** எமக்காகக் குரல்கொடுத்த நாடுகளுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டியது அவசியந்தான்! அவர்களின் குரல்கொடுத்தலுக்குக் காரணமாய் மனிதாபிமானம் மட்டும் இருந்திருந்தால் இன்னும் மகிழ்ந்திருக்கலாம். கதறக் கதற இங்கு நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டபோது (அப்படித்தான் சொல்கிறார்கள்) இந்த நாடுகளின் மனிதாபிமானம் எங்கே போயிற்றாம்? போர் முடிந்து 11 ஆண்டுகள் கழியும் வரை இந்நாடுகளெல்லாம் என்ன செய்து கொண்டிருந்தனவாம்? இக் கேள்விகள் மனதைக் குடையத்தான் செய்கின்றன.

சீனாவிற்கு இலங்கைஅரசாங்கம் சிவப்புக் கம்பளம் விரிக்கத் தொடங்கிய பின்தான் இந்நாடுகளின் மனிதாபிமானம் வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. இந்த மனிதாபிமானத்தைக் கருணையால் விளைந்த தென்பதா? கணக்குவழக்கால் விளைந்ததென்பதா? - தெரியவில்லை!

இவர்களது கருணை, கணக்குவழக்கால் விளைந்ததேயானலும் கேட்பாரின்றி வீழ்த்தப்பட்டுக் கிடக்கின்ற எமக்கு இன்றைய நிலையில் இக்கருணையும் தேவையாய்த்தான் இருக்கிறது.

இவர்களின் சுயநலத்துடன் கூடிய மனிதாபிமானத்தை, அறம் முற்று முழுதாய் அழியாது என்பதற்கான சாட்சியாகவே நான் பார்க்கிறேன்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **'எல்லாம் மாயை தானா? ஏழை எந்தன் வாழ்வும் வீணா?'**

*****

**4. கேள்வி:-** மியன்மாரில் நடக்கும் கலவரத்தில் மியன்மார் இராணுவம் நானூறு பேர் வரை கொன்று விட்டதாகவும் அதனால் உலகநாடுகள் அந்நாட்டைக்



கண்டிக்கவேண்டும் எனவும் ஐ.நா. சபையின் செயலாளர் விட்ட அறிக்கையைப் பார்த்தீர்களா?

**பதில் :-** ஐ.நா.சபையைப் பொறுத்தவரை நாற்பதாயிரத்தை விட நானூறு பெரிய எண்ணிக்கையாய் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **மேலும் கீழும் கோடுகள் போடு, அதுதான் ஓவியம். நீ சொன்னால் காவியம்.**

*****

**5. கேள்வி:-** இந்தியாவின் கொரோனா மருந்து வரத் தாமதமாகும். இந்நேரத்தில் இலங்கைக்குச் சீனா ஆறு லட்சம் கொரோனா மருந்துகளைத் தரச் சம்மதித்து இருப்பது பெரிய விடயம் இல்லையா?

**பதில்:-** நகைச்சுவை நடிகர் தங்கவேலு நடித்த பழைய படமொன்றில் மாமியாரும் மருமகளும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு, ஒரு பிச்சைக்காரனுக்கு வீட்டில் உள்ள அரிசியை எல்லாம் அள்ளிக் கொடுப்பார்கள். பிச்சைக்காரன் மகிழ்ந்து போவான். பின்னர் அவர்களுக்குள் முரண்பாடு நீங்கியதும் அவ்விருவரும் கொடுத்த அத்தனை அரிசியையும் மீண்டும் பறித்துக் கொள்வார்கள். நான் பிச்சைக்காரன் என்றும், மாமியார் என்றும், மருமகள் என்றும் யார் யாரைச் சொல்கிறேன் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். என்றைக்குத் தந்தவர்கள் மீண்டும் பறிக்கப் போகிறார்களோ என்பதுதான் என் கவலை.



உலகநாதரின் ஒப்பீனியன் * **'கொடுத்தவனே பறிச்சுக்கிட்டாண்டி மானே' கதைதானோ?**

*****

**6. கேள்வி:-** இம்முறையும் இந்தியா எம்மைக் கைவிட்டுவிட்டதே?

**பதில் :-** நான் அப்படி நினைக்கவில்லை. இந்தியா பிரேரணைக்கு வாக்களிக்காமல் விட்டதை இலங்கைக்கான ஆதரவாய்க் கொள்ளமுடியாது. பிராந்திய வல்லரசாய்க் கருதப்படும் இந்தியாவால் சில விடயங்களை வெளிப்படையாகச் செய்யமுடியாது. அதன் நடுவுநிலைமையில் ஈழத் தமிழர்களுக்கான ஆதரவின் சாயலையே காணமுடிகிறது. இந்தியாவின் கண் அசைவு இல்லாமல் நேபாளம் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்காமல் நடுநிலைமை வகித்திருக்க நியாயமில்லை. வாக்களிப்பில் கலந்து கொள்ளாவிட்டாலும் தமிழர்களுக்கான ஆதரவை இந்தியா இம்முறை வெளிப்படையாகக் காட்டியிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். அது பெரிய விடயம் என்பது என் கருத்து. பிரதமர் மோடியினுடைய உரையிலும் ஐ.நா. மனிதஉரிமைகள் சபை இந்தியப் பிரதிநிதியின் உரையிலும் ஈழத்தமிழர்கள் பற்றியும் அவர்களது உரிமை பற்றியும் அதற்கு இந்தியா பொறுப்பேற்றுள்ளமை பற்றியும் பேசப்பட்ட விடயங்கள் மிக முக்கியமானவை என்று கருதுகிறேன். அதுபோலவே மத்திய அரசாங்கத்தோடு கூட்டுச் சேர்ந்து தேர்தலுக்கு முகம் கொடுக்கும் தமிழ்நாடு அ.தி.மு.க. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஈழத்தமிழர்களின் விடிவுக்காய் தனித்தமிழீழம் வரை பேசப்பட்டிருப்பதையும் நாம் கவனிக்காமல் விடமுடியாது. இவற்றையெல்லாம் கூட்டிப்பார்த்தால் இந்தியாவின் நடுவுநிலைமையின் பக்கச் சார்பை நாம் அறிந்து கொள்ளலாம்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **எந்த 'றோ' மஹானு பாவுலலு அந்தரீக்கி வந்தனமு...**

*****

**7. கேள்வி:-** மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகள் 22. நடுநிலை வகித்த நாடுகள் 14. ஆதரித்து வாக்களித்த நாடுகள் 11. வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனே நடுநிலை வகித்த நாடுகளோடு ஆதரவளித்த நாடுகளையும் கூட்டி, தமக்கு 25 நாடுகளின் ஆதரவு இருப்பதாகவும் அதனால் இலங்கை தோல்வி அடையவில்லை என்றும் சொல்கிறாரே. இந்தக் கணக்கிற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

**பதில் :-** நான் ஏன் பதில் சொல்லவேண்டும்? சஜித் பிரேமதாஸதான் அதற்கு அழகாகப் பதில் சொல்லிவிட்டாரே. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்குக் கிடைத்த வாக்குகள் அறுபத்து ஒன்பது லட்சம் என்றும் தனக்குக் கிடைத்த வாக்குகள் ஐம்பத்து ஐந்து லட்சம் என்றும் தேர்தலில் வாக்களிக்காமல் விட்டவர்களின் தொகை இருபத்தாறு லட்சம் என்றும் அண்ணளவாய்க் கூறி தினேஷ் குணவர்தனவின் கணக்குப்படி வாக்களிக்காமல்விட்டவர்களின் ஆதரவு தனக்குத்தான் என்றும் கொண்டால் தான் இப்பொழுது இலங்கை ஜனாதிபதியாக இருக்கவேண்டும் என்று பகிடி விட்டிருக்கிறாரே. அதை நீங்கள் பார்க்கவில்லையா?

உலகநாதரின் ஒப்பீனியன் * **விழுந்தும் மீசையில மண் ஒட்டாத கதைதான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சிகள் தற்போதும் தொடர்கின்றன

## என்கிறது பொதுஜன பெரமுன



2014 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி , தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அர சாங்கத்தை வீழ்த்த முன்னெடுக்கப்பட்ட சூழ்ச்சிகள் தற்போதும் தொடர்கின்றன. எதிர் தரப்பினர் முன்வைக் கும் குற்றச்சாட்டுகளுக்கு சாதகமான வகையில் ஆளும் தரப்பின் அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் கருத்துரைக்கின்றமை அரசாங் கத்தை பலவீனப்படுத்தும் அவர்களது நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகள் சங்க மாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின் றன. மக்கள் மத்தியில் உணர்வுபூர்வமாகப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் சுற்றுச் சூழல் அழிப்பு விவகாரம் பிரதான பேசுபொருளாக காணப் பட்டது. பிற நாடுகளில் இடம்பெற்ற காடழிப்பு படங் களைக் காண்பித்து அரசாங்கத்துக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

சீனி வரிக்குறைப்பால் ஏற்பட்ட நட்டத்தை மோசடி என குறிப்பிட்டு எதிர் தரப்பினர் போலியான குற்றச் சாட்டுக்களை முன்வைத்தார்கள். எதிர் தரப்பினரது இந்தக் குற்றச்சாட்டுக்கு சாதகமாக ஆளும் தரப்பின் அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் கருத் துரைத்தார்கள். அரசாங்கத்தை ஏதாவது ஒரு வழியில் பலவீனப்படுத்த வேண்டும் என்பது இவர்களின் நோக்கம் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தற்போது இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண் ணெய் விவகாரம் அரசியல் களத்தில் சூடு பிடித்துள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் எதனையும் மறைக் கவில்லை. தேங்காய் எண்ணெயில் நச்சுப் பதார்த் தம் கலக்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்கமே வெளிப்படுத்தியது. இந்த மோசடியுடன் தொடர்புடைய வர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என்பதை பகிரங்கமாக அறிவித்துள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை வீழ்த்த 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறான பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆளும் தரப் பினர் உறுப்பினர்களும் எதிர்தரப்பிற்கு சார்பாக செயற்பட்டு 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். நல்லாட்சி அரசாங்கத்தால் நாட்டு மக்கள் பயன்பெறவில்லை.

பெரும்பாலான மக்களின் கோரிக்கைக்கு அமைய 2016 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தோற்றம் பெற்றது. 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இருந்து நாட்டு மக் கள் நல்லாட்சி அரசாங்கத்தைத் தோற்றுவித்த அர சியல் தவறை திருத்திக் கொண்டார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளார்கள்.

சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டம் முறையாக செயற்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தை பலவீனப் படுத்தும் வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன. அனைத்து சவால்களையும் வெற்றி கொள்ள முடியும். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிச்சயம் நிறைவேற்றப் படும் அதற்கு பொதுஜன பெரமுன முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். – என்றார்.

# மன்னார் – மதவாச்சி வீதியில் விபத்து; வாகன சாரதி காயம்







மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, தள்ளாடி சந்தியில் கிரவல் மண் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் கடந்த வியா ழக்கிழமை காலை 9.30 மணியளவில் குடை சாய்ந்து விபத்திற்குள்ளாகியதில் சாரதி படுகாயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மதவாச்சி பகுதியிலிருந்து மன்னார் நகருக்குள் கிரவல் மண் ஏற்றிக்கொண்டு சென்ற போதே குறித்த டிப்பர் வாக னம் தள்ளாடி சந்தியில் வைத்து கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

இதன் போது அந்த வீதியால் பயணித்தவர்களால் குறித்த டிப்பர் வாகன சாரதி மீட்கப்பட்டு காயத்துடன் மன் னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல் லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹோட்டல் ஊழியர்களின் மத்திய சங்கம் ஆர்ப்பாட்டம்






கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட ஹோட்டல் ஊழியர் மத்திய சங்கத்தினர் பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் கடந்த வியாழக்கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

# 8 வயது மகனை மிகக் கொடூரமாக போதையில் தாக்கிய தந்தை கைது

வெல்லவாய பகுதியில் வெஹரயாய என்ற கிராமத்தில் தனது மகனை, கொடூரமாகத் தாக்கிய தந்தையை, வெல்லவாய பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

31 வயதுடைய குறித்த தந்தை மது போதையில் வீடு வந்து, தனது சொற்படி மகன் நடக்கவில் லையென்று, தனது எட்டு வயது நிரம்பிய மகனைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இந்நிலையில் தாக்கப்பட்ட குறித்த சிறுவன் மறுதினம் பாடசாலைக்குச் சென்ற போது, நோய்வாய்ப்பட்ட நிலையிலேயே, வகுப்பில் அமர்ந் திருந்தான். இதனை அவதானித்த பாடசாலை அதி பர், அந்தச் சிறுவனிடம் காரணத்தை வினவி யுள்ளார்.

இதன்போது சிறுவன் தனது தந்தை தன்னை அடித்தமையைக் கூறி, தான் தாக்கப்பட்ட உடம்பின் பாகங்களையும் காட்டினான். இந்த விடயத்தை அதிபர் வெல்லவாயப் பொலிஸாருக்கு அறிவித்தார்.

பொலிஸார் பாடசாலைக்கு விரைந்து, சிறுவனின் நிலையைக்கண்டு, அச் சிறுவனை வெல்லவாய அரசினர் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதையடுத்து, சிறுவனின் வாக்குமூலத்திற் கமைய, சிறுவனின் தந்தையை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர் விசாரணையின் பின்னர், வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுவார் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சைப் பெற்று வரும் சிறுவனின் உடலெங் கும் பலத்த காயங்கள் தென்படுகின்றன எனவும், அக்காயங்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# ஊவா மாகாண அமைச்சு விடயதானங்களில் தமிழ் கல்விப் பிரிவு நேற்று முதல் நீக்கம்



ஊவா மாகாண அமைச்சுகளின் விடயதானங்களிலிருந்து தமிழ் கல்விப் பிரிவு நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் அமுலாகும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலினால் புதிய வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள், கூட்டுறவு விவகாரம் மற்றும் தமிழ் கல்வி தொடர்பான அமைச்சு என ஏற்கனவே இருந்த அமைச்சின் விடயங்களில் இருந்து தமிழ் கல்விப் பிரிவு நீக்கப்பட்டுள்ளது.




# தினம் ஒரு விவசாயத் தகவல்

இலங்கையிலிருந்து உடன் பழங்கள் மற்றும் காய்கறி ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய நாடுகள்
* மத்திய கிழக்கு
* மாலைதீவு
* Seychelles

இலங்கையிலிருந்து உடன் பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்யக்கூடிய நாடுகள்
* ஐரோப்பிய ஒன்றியம்
* சீனா
* அமெரிக்கா போன்றவை.
* கொரியா
* சிங்கப்பூர்
* ஹொங்காங்
* வியட்நாம்

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# ஓங்கி ஒலிக்கும் பெண்ணியல் வாதம்!

● முன்சி பஸ்றி

பெண்மை, தாய்மை, தலைமை என்பதன் முழு வடிவமே பெண். அடிமை என்பதை நொறுக்கி எரியும் அவள் கண்.

சமகால பேசுபொருள்களுள் பெண்ணிலை வாதம் அல்லது பெண்ணியல் வாதம் முக்கியம் பெறுகின்றது. ஒரு சமூகத்தின் மதம், கலாசாரம், மரபு என்பவற்றைத் தாண்டி இன்று பெண்ணியல் வாதத்தின் குரல் ஓங்கி ஒலிக்கின்றது. இருப்பினும் பெண்ணியலுக்குப் பலரும் பல்வேறு வியாக்கியானங்களைக் கூறியுள்ளனர்.

இன்றைய பெண்ணியலைப் பொதுவாக விளக்குவதாயின், சமூகத்தில் ஆண் – பெண் சமத்துவம் பேணப்பட வேண்டும். ஆண்களோடு பெண்கள் சம அந்தஸ்தை வகிக்கவேண்டும். சமூகத்தில் பெண்கள் ஒடுக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். பாலியல் அதிகாரம், பொருளாதார உரிமை என்பன வழங்கப்பட வேண்டும். இவையே பெண்ணியல் வாதத்தைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றுள் ஆண்களின் சம அந்தஸ்து பெண்களுக்கும் வேண்டும் எனக் கூறுவதைவிடப் பெண்களுக்குரிய அந்தஸ்து வேண்டும் எனக் கூறுவதே சிறந்தது.

இவை இவ்வாறு இருக்க அரசறிவியலினூடாகப் பெண்ணியல் வாதத்தை நோக்கினால் அரசு தொடர்பான பெண்ணியல் வாதத்துக்குப் கோட்பாடு கிடையாது. எனினும், பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு உண்டு. அரசு மற்றும் அரசியல் தொடர்பான விசேட அணுகுமுறை ஒன்றைப் பெண்ணியல் வாதம் முன்வைத்துள்ளது.

பெண்ணியல் வாதம் என்பது என்னவென்று சில அறிஞர்கள் கூறிய கருத்துக்களும் உள்ளன.

சகல தளங்களிலும் ஆணுக்குள்ள அனைத்து உரிமைகளும் பெண்களுக்குத் தேவை என்பதை வலியுறுத்துவது பெண்ணியல் வாதம். – டாக்டர் தேவத்தா –

இளம் பெண்கள், தொழிலில் ஈடுபடும் பெண்கள், வயதான பெண்கள் மற்றும் பொருளாதாரம், சமூகம், மரபு சார்ந்த முறைகளால் துன்புறும் பெண்கள் ஆகிய அனைவரையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொடுப்பதே பெண்ணியல் வாதம். – பாபரா ஸ்மித் –

பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவதே பெண்ணியல் வாதம். – ஒக்ஸ் போர்ட் ஆங்கில அகராதி –

மேலும், பெண்கள் மீதான எண்ணக்கரு என்னவாக இருந்ததென்றால் ஆணாதிக்கம் மற்றும் அடக்குமுறை ஊடாக பாலுறவு நிலை மேலெழுந்து ஆண்கள், பெண்கள் சமூகப் பிரிவுகளாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்றும், உலகத்தில் பெண்களின் பால் நிலைக்கு ஏற்ப அவர்களின் பொருள், கட்டழகு என்பவற்றை ஒழுங்குபடுத்தி பால் நிலைக்கு ஏற்ப குறித்த கடமைப் பொறுப்புக்கள் உரித்தாக்கப்பட்டுள்ளன என்றும் பெண்ணியல்வாதிகள் கூறுகின்றனர்.

இறுதியில் பெண்ணியல்வாதிகள், ஆண்மையக் கருவியாக உள்ள அரசானது பெண்கள் மீது ஆண்கள் உலகத்தைத் திணிக்கும் கருவியாகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டனர்.



பெண் அடிமைத்தனம் மறைந்து பெண்ணியல் வாதம் மேலெழுந்த பின்னரே இதுவரை காலமும் பூ, தென்றல் என மாத்திரம் வர் ணிக்கப்பட்ட பெண்கள் தீ, புயல் என மாற்றம் பெற்றனர். அவ்வாறு மாறிய சிங்கப்பெண்கள் என வீரப்பெண்மணிவேலு நாச்சியார், இரும்புப் பெண்மணி இந்திர காந்தி, இங்கிலாந்தை ஆண்ட மாகிர தாட்ர், இலங்கையை ஆண்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, அவரது மகள் சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரதுங்க, ஆஸ்திரேலியாவை ஆண்ட கோல்டா மேயர் எனப் பலர் உள்ளனர். அதில் மண்ணின் மகிமையாக விண்ணில் பறந்து விண்ணிலே சரித்திரம் படைத்து சாவடைந்த இந்திய அமெரிக்க விண்ணோடி கல்பனா சௌவ்லா மற்றும் விண் சென்று சாதித்த அனிதா வில்லியம்ஸ் என இவர்கள் மத்தியில் அரவணைப்பால் அருள் அரசி பெயர் பெற்ற அன்னை தெரேசாவும் உள்ளார்.

மேலும் ஆண்களைவிட பெண்கள் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை வெளிக்காட்டியவர் அலிசன் ஃபெலிக்ஸ். இவர் உசைன் போல்ட்டின் உலக சாதனையை முறியடித்தவர். உலகின் அதிவேக மனிதர் என்று அழைக்கப்படும் உசைன் போல்ட் ஓய்வுபெறுவதற்கு முன்பு வரை 11 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தார். ஆனால், அதனை முறியடித்து 11 தங்கப் பதக்கங்களை அலிசன் ஃபெலிக்ஸ் வென்றெடுத்தார். இதில் முக்கிய விடயம் என்னவென்றால் குழந்தை பிறந்து 10 மாதங்களிலேயே இவர் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். இவர் தனது பெண்மையையும், தாய்மையையும், தகைமைகளையும் விட்டுக்கொடுக்காத வீரப்பெண்ணாவார்.

சமூக உரிமைப் போராளி ரோசா பர்க்ஸ், ஆங்கில கால்வாயை இடைவெளியின்றி நான்கு தடவைகள் கடந்த நீச்சல் வீரர் சாரா தாமஸ், இளம் சுற்றுச்சூழல் ஆர்வலர் 16 வயதுச் சிறுமி கிரேட்டா தன்பர்க், உலக சாதனை படைத்த இந்திய கிரிக்கெட் வீராங்கனை 'பெண் சச்சின் டெண்டுல்கர்' என அழைக்கப்படும் மிதாலிராஜ், தைரியமான பெண்மணி கவுரிலங்கேஷ் எனும் பத்திரிகை ஆசிரியர், வாள்வீச்சு சாதனையாளர் பவானிதேவி எனப் பெண்கள் பலர் பெண்ணியல் வாதத்தின் உருவமாக இருக்கின்றார்கள்.

இந்தப் பூமியில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைகளும் இவ்வாறு ஏதோ ஒருவகையில் சிங்கக்குட்டிகளே. பெண்ணியல் வாதம் அரசியலை ஆராயும் ஓர் அணுகுமுறை மாத்திரம் அல்ல. பெண்ணியல் வாதத்தின்படி ஒவ்வொரு பெண்களுக்குள்ளும் மகாலட்சுமியும் இருப்பார் ஜான்சிராணி லட்சுமியும் இருப்பார்.

---



## இந்தியப் புலமைப் பரிசில்களுக்காக

# இலங்கை மாணவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன விண்ணப்பங்கள்

இந்தியாவில் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சி/கலாநிதி கற்கை நெறிகளுக்கான புலமைப் பரிசில்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம், மௌலானா ஆஸாத் புலமைப்பரிசில் திட்டம், ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம் மற்றும் பொதுநலவாய புல மைப்பரிசில் திட்டம் ஆகியவற்றுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலாசார உறவுகளுக்கான இந்தியக் கவுன்சிலின் ஊடாக 2021 – 2022 கல்வி ஆண்டுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தில் பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/மருத்துவ உதவி மற்றும் ஆடை வடிவமைப்பு கற்கை நெறி தவிர்ந்த) அனைத்துப் பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

மௌலானா ஆஸாத் புலமைப் பரிசில் திட்டத்தில் பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/துணைமருத்துவம் மற்றும் ஆடை வடிவமைப்பு கற்கைநெறி தவிர்ந்த) முதுமாணிப் பட்டக் கற்கைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டத்தில் B.E அல்லது B.Tech பட்டப் படிப்புகளுக்கு வழிசமைக்கும் தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டத்தில் மருத்துவம்/துணைமருத்துவம் மற்றும் ஆடை வடிவமைப்புக் கற்கை நெறிகள் தவிர்த்து அனைத்துத் துறைகளின் கலாநிதிப் பட்ட கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காகத் தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசு தெரிவு செய்யும்.

இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதிப் பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல் இலங்கை அரசின் கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும்.

அனைத்துப் புலமைப்பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்துக்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம் மற்றும் புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குப் பல்கலைக்கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும். மேலும், இந்தியாவிலுள்ள அனைத்து ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில் பெற்றவர்களுக்கும், இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பனவும், இவற்றை விட ஏனைய பல்வேறு அனுகூலங்களும் வழங்கப்படும்.

இது தொடர்பான தகவல்களை இலங்கை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றை அணுக முடியும்.

இதேவேளை, இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்தால் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதற்காக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் புலமைப்பரிசில்களுக்காக ஜி.சீ.ஈ. உயர்தரம், பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் இலங்கையின் ஏதேனும் அரச தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில்/தொழில்நுட்பக் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் இந்தியத் தூதரகத்தின் www.hcicolombo.gov.in எனும் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்திகள்

## பேராயர் இராயப்பு ஜோசப்பின் இழப்பு தமிழர்களை அநாதைகள் ஆக்கி விட்டது!

### ஆனந்தசங்கரி வேதனை



பேராயர் இராயப்பு ஜோசப்பின் இழப்பு தமிழ் மக்களை அநாதைகள் ஆக்கிவிட்டது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்த அவர் –

பேராயர் இராயப்பு ஜோசப் அவர்கள் ஓர் சகாப்தம் என கூறுகின்றமை மிகை ஆகாது. பல வழிகளிலும் அன்னாருக்கு அந்தப் பெயர் பொருத்தமாகும். வவுனியாவில் அருட்தந்தையாகக் கடமையாற்றிய காலத்தில் நான் அவரை முதன் முதலில் சந்தித்தேன். எனக்கும் தனக்குமுள்ள உறவைப்பற்றி எடுத்துரைத்தமை அன்று எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

இவர் மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்தபோது அவருடன் இணைந்து பல துறையிலும் பணியாற்றிய அருட்சகோதரிகளில் ஒருவராகிய மறைந்த ஒலிவியாவையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர விரும்புகின்றேன்.

சமயத் தொண்டோடு அவர் பங்கெடுத்த பணிகள் பல. அவற்றின் மிக பிரதானமானது இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அவர் ஆற்றிய தொண்டேயாகும். எவருக்கும் பயப்படாது தான் சரியெனநினைத்ததை கடைசிவரை செய்து முடித்தவர் அவர்.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் அன்னாரால் சுட்டிக் காட்டப்பட்ட சிறு தவறுகளைக் கூட அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் திருத்திக்கொண்டனர். அச்செயல் அன்னாருக்கு இருசாராரும் கொடுத்த பெரும் மதிப்பினாலேயே ஆகும்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக சகல தமிழ் அரசியற் கட்சிகளையும் ஒன்று சேர்க்க பெரும் முயற்சி எடுத்திருந்தார். அது சம்பந்தமாகப் பல தடவைகள் கட்சித் தலைவர்களை வரவழைத்து பேச்சு நடத்தியதுடன் ஆலோசனையையும் வழங்கியிருந்தமை உலகறிந்த உண்மை. அதுமாத்திரமன்றி அன்னாரின் பல வெளிநாட்டு விஜயங்களில் எமது பிரச்சினைகள் தொடர்பாக எடுத்த முயற்சியை நான் நேரில் பார்த்துள்ளேன்.

உடல் நலன்குன்றி இந்தியா சென்று வைத்தியத்தை முடித்துக்கொண்டு திரும்பிய வேளை அவரை சந்தித்து பேசிய சிலரில் நானும் ஒருவன். இறுதி வரை இனப்பிரச்சினையை மையமாகவைத்தே செயற்பட்டார் என்பது அனைவரும் அறிந்ததே.

அன்னார் உயிருடன் இருந்த வரை எம்மக்கள் மிக்க தைரியமாக செயற்பட்டார்கள் என்பதும், இன்று அவர்கள் அநாதைகளாக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்பதும் நாம் அனைவரும் அறிவோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என்சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் பிரார்த்திக்கிறேன். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மனிதநேயத்தின் உன்னத பண்பாளர் பேராயர் ஜோசப்
## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் இரங்கல்



மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை பேராயர் இராயப்பு ஜோசப், மதத்துக்கு அப்பாலும் மனித நேயத்துடன் வாழ்ந்த பண்பாளர் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பேராயரின் மறைவு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை பேராயர் இராயப்பு ஜோசப் அவர்களின் இழப்பானது, அனைத்து இன மக்களுக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது.

அவர் சகல இன மக்களினதும் கௌரவத்துக்கு உரியவராகவும் நன்மதிப்பை பெற்றவராகவும் இருந்தார். அது மாத்திரமின்றி அவர் அனைவராலும் நேசிக்கப்பட்டவர். இன, மத பேதங்களுக்கு அப்பால் மாவட்டத்தின் அபிவிருத்தியில் கூடிய கரிசனை செழுத்திய பேராயர், துன்பப்பட்ட மக்களுக்கு எந்த விதமான பேதமுமின்றி உதவி புரிந்தவர்.

அவர் ஏழை மக்களின் அன்புத் தோழனாக இருந்தது மாத்திரமின்றி, இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் விரும்பினார். அதற்காக அரும்பாடுபட்டார். அனைத்து மத பெரியார்கள், அரசியல் பிரதிநிதிகள், சாதாரண மக்கள் ஆகியோருடன் நல்லுறவைப் பேணி, சமூக முன்னேற்றத்துக்காக உழைத்தார். கத்தோலிக்க மக்களுக்கு அன்னார் ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார்.

அவரது இழப்பு கத்தோலிக்க சமூகத்துக்கு மாத்திரமின்றி நாட்டு மக்களுக்கும் பேரிழப்பாகும் எனஅவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழினத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் துணிவுடன் செயற்பட்டவர் இராயப்பு ஜோசப்

### சிறிகாந்தா இரங்கல்



இலங்கைத்தீவில் எங்கள் தமிழ் இனத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் மிகவும் நெருக்கடி நிறைந்த காலக்கட்டத்தில், தனது ஆத்மீகப் பயணத்தின் நன்கறியப்பட்ட குறிக்கோளுடன் தமிழ்த் தேசிய அபிலாஷைகளையும், இணைத்தபடி, துணிச்சலோடும், தூரநோக்கோடும் செயற்பட்ட உன்னத மனிதராக உயர்ந்து நின்றவர் மறைந்த இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள்.

அந்த மா மனிதருக்கு தலை சாய்த்து அஞ்சலி செலுத்த நாம் அனைவரும் கடமை கொண்டுள்ளோம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான சட்டத்தரணி ந.ஶ்ரீகாந்தா.

மன்னார் மாவட்ட முன்னாள் பேராயரின் மறைவு தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு வழங்கிய அஞ்சலி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

அடிமைப்படுத்தப்பட்டிருந்த இந்திய தேசத்தில் சுவாமி விவேகானந்தர் ஒரு வரலாற்றுத் தேவையாக முன்னெழுந்து நிமிர்ந்து நின்றதைப் போலவே, இலங்கைத் தமிழ்த் தேசத்தில், இன்னொரு விதத்தில், இராயப்பு ஜோசப் ஆண்டகையின் வரலாற்று வகிபாகம் அமைந்திருந்ததை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

தமிழ் இனத்தின் அரசியல் ஒற்றுமையை பலவீனப்படுத்திவிடப் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்பட்டு வந்திருக்கும் மத பேதம் என்பது, நிரந்தரமாக துடைத்தெறியப்படுவதை சாதிப்பதும், தோல்விகளைக் கண்ட கடந்த காலத்தின் தொடர் விளைவுகளாகக் காட்சி தரும் சராசரி அரசியல் நடவடிக்கைகளுக்கு அப்பால், பரந்ததும் – பலமானதுமான ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் தொலை நோக்குடன் கட்டி எழுப்பி, ஒளிமயமானதோர் எதிர்காலத்தை எம் சந்ததிகளுக்கு உறுதிப்படுத்திட, ஒற்றுமையாக செயற்படுவதுமே, பிரிந்து சென்றுவிட்ட ஆண்டகைக்கு எமது தேசம் செலுத்த வேண்டிய உரியதோர் அஞ்சலியாகும். – என்றுள்ளது.

## தமிழர்களின் பெருமதிப்பு பெற்ற ஆயர் இழப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும்

### அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அஞ்சலி

இனவழிப்பு நடைபெற்ற போது 70 ஆயிரம் மக்கள் மட்டுமே வன்னியில் உள்ளனர் என்று சிங்கள அரசும் இந்திய முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ப்ரணாப் முகர்ஜியும் கூறியபோது அந்தக்கூற்றை மறுத்து ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழ்மக்கள் காணாமல் போயுள்ளார்கள் என்று உலகுக்குத் தெரியப்படுத்தியவர் பேராயரே ஆவார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் நீதிக்காகவும் பறிக்கப்பட்ட உரிமைகளுக்காகவும் உரக்கக்குரல் கொடுத்தவர்களில் ஆயர் முக்கிய பங்கு வகித்தார். தமிழினத்தின் விடுதலைக்காக பல முனைகளிலும் முனைப்புடன் செயற்பட்ட சிறந்த தமிழின உணர்வாளர். 2009 இல் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்மக்களின் இருப்பைக் காக்க தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் உருப்பெற வேண்டும் என்று பாடுபட்டு தோற்றுநராகவும் செயற்பட்டார். பேராயரின் முனைப்பால் தான் தமிழ் சிவில் சமூக அமையம் உருப்பெற்றது.

பேராயரின் முனைப்பான செயற்பாடுகளை சிங்கள அரசு திட்டமிட்டே முடக்கியது. ஆயரின் இழப்பு தமிழ்மக்களைப் பொறுத்தவரை ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். மன்னார் பிரதேசத்தில் நில ஆக்கிரமிப்பு நடைபெற்றபோது தமது திருச்சபையால் நிலங்களை வாங்கி போரால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு இலவசமாகப் பகிர்ந்தளித்தார். போரின் பின்பான காலப்பகுதியில் தமிழர்களின் காவலனாக இருந்து தமிழ்மக்களுக்காகப் பாடுபட்டு உழைத்த அன்பிற்குரியவர்.

நீண்ட காலம் உடல் சுகவீனம் காரணமாக ஓய்வு நிலையில் இருந்த மறைமாவட்ட ஆயர் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மருதமடு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் இறைபதம் அடைந்ததாக மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சூசை அடிகளார் தெரியப்படுத்தியுள்ளார்.

பேராயர் மதத்துக்கு அப்பாற்பட்டு கடந்த போராட்ட காலத்தில் பல்வேறு தரப்புக்களுடனும் மக்களின் விடுதலை தொடர்பிலான தொடர் பேச்சுகளிலும் மக்களின் விடுதலைக்கான செயற்பாடுகளிலும் முனைப்பாகச் செயற்பட்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. யுத்த காலங்களில் எந்தப் பயமோ தயக்கமோ இன்றி சிங்கள இராணுவ முகாம்களுக்குள் சென்று மக்களின் நாளாந்த இயல்பு வாழ்விற்கு இடையூறு செய்யக் கூடாது என்று வாதாடியுள்ளார்.

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை ஆயர் அவர்களின் அர்ப்பணிப்பான மாபெரும் பணிக்காக எமது இறுதி வணக்கங்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கின்றோம். இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் பரிசுத்த ஆத்மா சாந்தியடையட்டும். – என்றுள்ளது

## விடைபெற்றார் வருந்துகின்றோம்!

**தடைவந்த போதும்
படைவந்த போதும்
நடைமாறாகொள்கையுடன்
குடைபோன்று சேவைசெய்தார்
விடை பெற்றார் வருந்துகின்றோம்**

**தமிழ்தேசியத்திற்காய் உழைத்தார்
தன்மானத்தமிழினத்தின் காவலனாய்
தன்னிகரற்ற பணி செய்த ஆண்டகை.
அருட்திரு இராஜப்பு ஜோசப் அடிகளார்
ஆகுதியானார் அஞ்சலி செலுத்துவோம்**

**ஆன்மீக உடைதரித்து ஆண்டமண்ணில்
ஆக்கிரமிப்பை எதிர்த்த யோக்கியவான்
அனைத்துலக சமூகத்திற்கும் உண்மைகளை
வினைத்திறனாய் நிரூபித்த பெருமகனார்
மறைந்திட்டார் மனமுருகி ஏங்குகின்றோம்**

**மன்னார் மண் முன்னாள் மறைமாவட்ட ஆயர்
மறத்தமிழ் இனத்தின் மறக்கமுடியா பெரியார்
அறத்தின் வழியில் அல்லல்களை தீர்த்தார்
ஆண்டவன் அழைப்பில் எமைவிட்டு பிரிந்தார்
வேண்டுவோம் ஆத்மா சாந்தி பெற்றிடவே**

**-அம்பிளாந்துறையூர் அரியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கை ஊடகவியலாளர்கள்

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

**கொழும்பு, ஏப்ரல் 02**
**இலங்கையில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பல வழிகளில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

**இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-**

இலங்கையில் குறிப்பாக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள சில ஊடக வியலாளர்கள் இவ்வாறான அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் சில அதிகாரிகள் அரச வாகனங்களைப் பயன்படுத்தி தம்மைக் கண்காணித்து வருகின்றனர் ஊடகவியலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

போருடன் தொடர்புடைய நினைவேந்தல்கள் அல்லது நில ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் போன்ற முக்கியமான நிகழ்வுகள் பற்றி அறிக்கையிடுவதைத் தவிர்க்கும்படி ஊடகவியலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சில ஊடகவியலாளர்கள், நாட்டில் இடம்பெற்ற போர் மற்றும் போர்க்காலத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பில் அறிக்கையிடும்போது, பாதுகாப்புப் பிரிவினரின் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது – என்றுள்ளது.

மேற்படி சம்பவங்கள் குறித்த ஆதாரங்களையும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

# வார்த்தைகளால் அல்லாமல் செயல்களால் வாழ்ந்து காட்டியவர் ஆயர் இராயப்பு ஜோசப்

## தமிழ் அரசியல் கைதிகள் இரங்கல்

மறைந்த மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அருட்திரு கலாநிதி இராயப்பு ஜோசப் மனித நேயமும் பிறர் அன்பும் மிகுந்த பெருந்தகை யானவர். தமிழ் அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிறைச்சாலைகளினதும் வாசல்களைத் தரிசித்து கைதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டி, ஓர் அன்னையைப் போல் ஆற்றுப்படுத்தி, ஆசிர்வதித்து வந்த பெருந்தகையை நாம் சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம்.

–இவ்வாறு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் பெற்றோர், உறவினர்கள் ஊடாக அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

உண்மையான யேசுவின் சீடராக வார்த்தைகளால் அல்லாமல் செயல்களால் வாழ்ந்து காட்டியவர் மன்னார் மறைமாவட்டத் தின் ஓய்வு நிலை ஆயர் அருட்திரு கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை.

அன்னார் தனது 80ஆவது அகவையில் ஆண்டவர் கட்டளையின் பிரகாரம் சிந்திப்பதை நிறுத்தி நிரந்தர ஓய்வுக்குள் தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ளார்.

'நீங்கள் மற்றவர்களுக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை நான் அறிந்து கொள்வேன்' என்ற யேசு பிரானின் அருள்வாக்கிற்கு வடிவம் கொடுத்து ஒடுக்கப்பட்டவர்களினதும் திக்கற்றவர்களினதும் உண்மைக் குரலாகத்தேசம் தாண்டி ஒலித்த ஒரு தமிழ்ப் பற்றாளரை இன்று தமிழ் உலகம் இழந்து துயருற்று நிற்கின்றது.

வேடமணிந்து கோஷமிட்டு, முதன்மை இருக்கைகளைத் தம்வசப்படுத்தி மாலை மரியாதைகளுடன் வலம் வருகின்ற வெற்றுச் சமூகப் பற்றாளர்களைப் போலன்றி, சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள ஆழமான தொடர்பை வெளிப்படுத்தி, நீதி நேர்மைக்காகத் துணிவோடு போராடிய அறப்போராளியாக தன் அடையாளத்தைப் பதித்து விட்டுச் சென்றிருக்கின்றார் ஆயர் பெருந்தகை. 'பொதுப் பார்வைக்குக் காட்சிப்படுத்தும் எந்த வொரு செயல்களிலும் சாட்சியம் இருப்பதில்லை.

விளம்பரமில்லா நற்காரியங்களே ஆண்டவன் சந்நிதானத்தில் என்றும் விலை மதிப்பானவை' என்பதற்கொப்ப சிறைக்கொட்டடிகளில் சிதைவுற்றுக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் அத்தியாவசிய விடயங்களில் அழையா விருந்தாளியாக தன் முனைப்பு கொண்டு பல நற்காரியங்களைச் செய்திருந்தார் ஆயர் அவர்கள்.

மனித நேயமும் பிறர் அன்பும் மிகுந்த பெருந்தகையான இவர், தமிழ் அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிறைச்சாலைகளினதும் வாசல்களைத் தரிசித்து கைதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டி, ஓர் அன்னையைப் போல ஆற்றுப்படுத்தி, ஆசிர்வதித்து வந்திருந்தார்.

சிறைச்சுவர்களுக்குள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏதேனும் அல்லல் நேர்ந்து விட்டதென்று அறியக் கிடைத்தால், உடனடியாகச் செயற்பட்டு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜயலத் ஜயவர்தனவுடன் தொடர்பு கொண்டு நிலைமை தொடர்பில் கவன மீட்ட என்றுமே பின் நின்றதில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் அரச தலைவர், பிரதம நீதியரசர் முதற் கொண்டு, சட்டமா அதிபர், நீதி மற்றும் சட்டத் துறை சார் அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் நேரடியாகச் சென்று சந்தித்துக் கலந்துரையாடி வந்திருந்தார். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் என்றால் மிகையில்லை.

இவ்வாறு சொற்கோவைகளுக்குள் மாத்திரம் வரையறுத்துவிட முடியாத பரந்து விரிந்த செயல் எல்லையைக் கொண்டிருந்த அதி வணக்கத்துக்கு உரியவரின் அர்ப்பணிப்புகளை இட்டு நிரப்ப முடியாத இடைவெளி ஏற்பட்டுள்ளமையானது, பெரும் வருத்தத்திற்குரியதே.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அலுத்து ஓயாது மக்கள் பணி செய்து வந்த மரியாதைக் குரிய மகானின் பேரிழப்பினால் துயரடைந்திருக் கின்ற அத்தனை மனித இதயங்களுக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் ஆண்டகை அவர்களின் ஆத்மா பரமபதமடைய சிறை அறைகளுக்குள் இருந்தபடி சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம் – என்றுள்ளது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# வீடொன்றின் சுவாமி அறையில் புதையல் தேடி அகழ்வு நடந்ததா?

## யாழ்.பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப்.02

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் வீதியில் வீடொன்றின் சுவாமி அறையில் புதையல் உள்ளமை தொடர்பில் அகழ்வுப் பணி இடம்பெற்றதா? என்று பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வீட்டில் இராணுவத்தினர் எனக் கூறிய சிலர் அகழ்வுப் பணியை முன்னெடுக்கின்றார் என நேற்று நண்பகல் பொலிஸ் அவசரப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

எனினும், அங்கு அகழ்வுப் பணியை முன்னெடுத்தோர் பொலிஸாரின் வருகை அறிந்து தப்பிச் சென்றினர்.

வீட்டின் உரிமையாளர் பொலிஸாருக்குமாறு பட்ட தகவல்களை வழங்கியுள்ளார். அவர் தான்தான் சுவாமி அறையின் நிலத்தைக் கொத்தியதாகவும் கூறியுள்ளார்.

அதையடுத்து சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ டைனமற் சிக்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.02

யாழ்., மண்டைதீவுக்கு அண்மையிலுள்ள குதிரைப் பிட்டியில் 10 கிலோகிராம் டைனமற்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த டைனமற்கள் ஒரு பிளாஸ்ரிக் கான் ஒன்றில் நூதனமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

10 கிலோ எடை கொண்ட இந்த டைனமற் வெடி மருந்துகள், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைக்குப் பயன்படுத்தும் நோக்கில் இப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த டைனமற்கள் கைப்பற்றப்பட்ட போதும் அவற்றை அங்கு மறைத்து வைத்திருந்தார்கள் என எவருமே கைது செய்யப்படவில்லை.

# மனித நேய விடயங்களில் மிகத்துணிச்சலான ஆயர்

## முன்னாள் எம்.பி. சரவணபவன் இரங்கல்



மனிதநேயம் தொடர் பாக, ஓய்வுநிலை ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகையின் செயற்பாடுகள், அவர் கொண்ட நேர்மையும் துணிச்சலும் அவரைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளராக இனம் காணவைத்தது.

– இவ்வாறு இரங்கல் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். இது குறித்து அவர் விடுத்த இரங்கல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது வள்ளுவன் வாக்கு. அப்படித் தமது வாழ்வை முழுமையாக வாழ்ந்து முடித்து, தம்மை முழுமையாக அடையாளப்படுத்தி மறைந்துள்ளார் மன்னார் மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை.

ஆயர், தனது சேவைகளை மக்கள் தொண்டாகப் பெருமையுடன் ஏற்றுக் கொண்டதோடு அதனைத் தனது வாழ்வின் இலக்காகவும் ஆக்கிக் கொண்டவர். மனிதநேயம் தொடர்பான அவரது செயற்பாடுகளில் அவர் கொண்ட நேர்மையும் துணிச்சலும் அவரைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளராக இனம் காணவைத்தது.

போர்க்காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் துணிச்சலானவை மட்டுமல்ல பல சவால்களை அழுத்தங்களை அவர் எதிர்கொள்ளவும் வைத்தன. இருந்தும் எந்த வகையிலும் அவர் மக்களுக்கான தன் பணிகளை நிறுத்தியதே கிடையாது.

இறுதி வரை அவர் எந்த அளவுக்குத் தன்னை ஒரு மனித நேயச் செயற்பாட்டாளராக நிலைநிறுத்திக் கொண்டாரோ அந்த அளவுக்குத் தமிழ்த் தேசிய உணர்வுள்ளவராகவும் இனம் காட்டிக்கொண்டார்.

அவரது மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு இறை தூதனை இழந்த துயரத்தைக் கொடுத்திருப்பது நிஜமே! – என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிடம் நல்லபெயரைத் தாம் பெறுவதற்காக மக்களை வீதியில் விட்டுள்ளனர் அதிகாரிகள்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் காட்டம்

அரசை நெருக்கடிக்குள்ளாக்கக்கூடாது என்ற நினைப்புடன் அரசை திருப்திப் படுத்தி மக்களைப் பட்டினிபோட்டு நடுத் தெருவில் விடும் வகையில் வடக்கு அதி காரிகள் சிலர் செயற்படுகின்றனர் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணப வன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்தமையைய டுத்து யாழ். நகர் மத்திய பகுதி மற்றும் திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம் என்பன முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதி மக்களுக்கு அரச உதவிகள் எவை யும் கிடைக்கவில்லை. அது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரி வித்த அவர் –

யாழ்ப்பாண நகர் மத்திய பகுதியிலுள்ள நவீன சந்தையில் தொற்றாளர்கள் சிலர் எழுமாற்றுப் பரிசோதனையில் கண்டறியப் பட்டனர். அதையடுத்து நகரின் முக்கிய பகுதி முடக்கப்பட்டுள்ளது. சுமார் 225 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றில் பணியாற்றும் 800 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இது வரை 117 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

ஆனாலும் மாவட்ட செயலர் அறிவித்தல் முடக்கப் பகுதிக்குள் அரச மற்றும் தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் செயற்படு கின்றன. எமது உள்ளூர் வர்த்தக நிலை யங்கள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன.

அதுவும் பண்டிகைக்காலத்தில் எமது வர்த்தகர்கள் பெருமளவு முதலீடு செய் துள்ள நிலையில் அவர்களின் வர்த்தக



நிலையங்கள் முடக்கப்பட்டு மறுபுறம் பல தேசிய மற்றும் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் அதற்கு அண்மித்த பகுதி களில் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதுமாத்திரமல்லாமல் திருநெல்வேலி கிராமத்தின் ஒரு பகுதியான பாற்பண்ணை கிராமம் முடக்கப்பட்டுள்ளது. அந்தப் பகு தியை அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினரு டன் இணைந்து முடக்கி வைத்துள்ளார் கள். ஆனாலும் 'கண்காணிப்பு வலயம்' என்ற ஒரு சொல்லாடலைப் பயன்படுத்தி வருகின்றனர். முடக்கம் என்று அறிவித் தால் அரசின் 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கவேண்டும். அது போதாது என்பது வேறு. ஆனாலும் அந்த நிவாரணத் தொகையை மக்களுக்கு வழங்கக் கூடாது என்பதற்காக அல்லது வழங்குவதை தவிர்ப்பதற்காக 'கண்காணிப்பு வலயம்' என்று அறிவித்திருக்கின்றார்கள்.

இது தொடர்பில் அதிகாரிகளிடம் தொடர்புகொண்டால், ஒருவரும் பொறுப் பெடுக்கின்றார்கள் இல்லை. பொறுப்பை மற்றவர்கள் மீது சுமத்தி விட்டு தப்பிக்கும் யுக்தியையே கையாள்கின்றார்கள்.

இந்தத் தீர்மானத்தை எடுத்த அதி காரிகளிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்பு கின்றேன். நீங்கள் அறிவித்த 'கண்காணிப்பு வலயத்தினுள்' உள்ள அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்துபவர், அந்தப் பகுதியிலிருந்து வெளியே வந்து தனது தொழில் நடவடிக்கைக்கு செல்ல முடியுமா? இல்லை. அதற்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதிக்க மாட்டார்கள். அப் படியான சூழலில் அவரது குடும்பம் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வது? இதையெல்லாம் சிந்திக்காமல், வெறுமனே அரசைக் காப்பாற்றும் வகையில், 'கண்காணிப்பு வலயம்' என்று அறிவித்து பாற்பண்ணை கிராம மக்களின் வயிற் றிலடித்துள்ளீர்கள்.

தென்னிலங்கை வர்த்தக நிலையங் களில் தொற்று வராது என்ற அடிப்படையில் அவர்களை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கும் அதிகாரிகளால் ஏன் உள்ளூர் வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதிக்கக் கூடாது.

இத்தகைய மோசமான நிலைமை ஒன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் நடக்கும் நிலையில், இந்த மாவட்ட மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட அமைச் சரோ, ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரோ அல்லது ஏனைய மக்கள் பிரதிநிதிகளோ வாய்மூடி மௌனமாக இருக்கின்றமை பொருத்தமற்றது.

பாற்பண்ணைக் கிராமத்தைச் சேர்ந்த வர்களின் வாழ்வாதாரத்துக்கு ஏற்ற வழி வகைகளை அதிகாரிகள் உடனடியாகச் செய்ய வேண்டும். அந்தப் பகுதி மக்களுக் குரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண் டும். அரசிடம் நற்பெயர் வாங்குவதற்காக செயற்படாது, மக்களின் நலன் சார்ந்து சிந்தித்து அதிகாரிகள் செயற்பட வேண்டும். – என்றுள்ளது.

# ஓமானில் துன்புற்ற 248 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

வேலைக்காக ஓமானுக்குச் சென்று அங்கு துன்புறுத்தல்களுக்கு உள்ளான 248 இலங்கையர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் என அறிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த குழுவினர் கடந்த வியா ழக்கிழமை இரவு இரண்டு விமா னங்கள் மூலம் நாட்டை வந்தடைந் தனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழில் போதைவஸ்துடன் ஒருவர் கைதாகினார்

50 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தார் எனக் குடும்பத் தலைவர் ஒருவர் காங்கேசன் துறை குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை கட்டுவனைச் சேர்ந்த 49 வயதுடைய 3 பிள்ளைகளின் தந் தையே நேற்று (வெள்ளிக்கிழமை) அதி காலை ஒரு மணியளவில் கைது செய்யப் பட்டார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவ லின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையி லேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான 50 கிராம் ஐஸ் போதைப் பொருள் சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்டது. அவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலை யத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

## யாழில் மேலும் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் இரண்டிலும் 470 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 6 பேருக்குத் தொற்று கண்ட றியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த 84 வயது பெண்ணொ ருவர் உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோ தனையின்போதே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன்மூலம் யாழ்ப் பாணத்தில் 7ஆவது நபர் கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதி யில் சேர்க்கப்பட்ட 3 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் எழு மாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டது. இவர் சந்தைக்கு வருகை தந்த நிலையில் கண்டறியப்பட்டவர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசா லையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது – என்றார்.

## வவுனியாவில் சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் போகஸ்வெவ மகா வித்தி யாலயத்தில் இடம்பெறவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெடிவைத்தகல்லு மற்றும் அதனைச் சூழவுள்ள கிராம மக்கள் நீண்ட கால மாக கல்வி, சுகாதாரம் உட்பட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின் றதைக் கருத்தில்கொண்டே, இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணி உறுதி தொடர்பான பிரச்சி னைக்கு நிலையான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வது, குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல், போகஸ் வெவ வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல், உர களஞ்சியசாலை ஒன்றை நிர்மாணித்தல் போன்ற பிரச்சினைகளைக் கிராம மக்கள் முன்வைத்துள்ளனர் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியின் கிராமத்துடன் உரை யாடல் நிகழ்வின் நோக்கம், அரசியல் பிர முகர்கள், அதிகாரிகளுடன் கிராமத்துக்குச் சென்று, மக்களின் பிரச்சினைகளை கேட்டு, உடனடித் தீர்வு வழங்குவதாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கத்தியால் வெட்டிப் படுகாயம் அடைந்த அவர் மீது கற்களாலும் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது எனத் தெரியவந்துள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு திருட்டுச் சம்பவங்களை உடனடியாக முறியடித்த நடவடிக்கைக்கு குறித்த பிரதேச சபை உறுப்பினர் தலைமை தாங்கியிருந்தார் என்று தெரியவருகின்றது.

நேற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதி யான திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களின் துணையுடன் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் 300 வீட்டுத்திட்டம் பகுதி யில் மோதல் சம்பவம் இடம்பெறுகின்றது என அவருக்குத் தகவல் வழங்கப்பட்டிருக் கின்றது.

சம்பவத்தை அடுத்து சுமரசம் ஏற்படுத்தும் முயற்சியாக தனியாக அவர் அங்கு சென் றிருக்கின்றார். சென்ற பின்னரேயே திட்ட மிட்டு அவர் வரவழைக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கின்றது.

அங்கு அவரின் தலை மீது கத்தியால் வெட்டப்பட்டு படுகாயப்படுத்தப்பட்டிருக்கின் றார். அதன் பின்னர் அங்கு நின்றிருந்த சிலர் கற்களால் அவரின் தலை மீது தாக் குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்த அவருக்கு நெருக்கமானவர்கள் அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரு குடையின் கீழ் அணிதிரள்வதே ஆண்டகைக்குச் செலுத்தும் அஞ்சலி

## தமிழர் விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தராசு அவர் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் இரங்கல்

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அது கருக்கொண்ட காலம் முதல் கத்தோலிக்க மத குருமார்கள் பலர் காத்திரமான பங்களிப்பைச் செய்து வந்துள் ளனர். இவர்களில் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை முதன்மை யானவர். தமிழ் மக்கள் பாதிக் கப்பட்ட போதெல்லாம் மதத்தின் குரலாக அல்லாமல் இனத்தின் குரலாகவே ஒலித்தவர். அதேசம யம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தராசாக வும் விளங்கியவர். மதத்தையும் தாண்டிய தனது நடுநிலை தவ றாத இனப்பற்றால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின்பால் சர்வதேசங்களின் பார்வையைக் குவித்தவர் என்று தமிழ்த் தேசி யப் பசுமை இயக்கத்தின் தலை வர் பொ.ஐங்கரநேசன் குறிப்பிட் டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவு குறித்து பொ.ஐங்கரநேசன் வெளியிட் டுள்ள அஞ்சலிக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அஞ்சலிக் குறிப்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்–

ஆயர் இராயப்பு யோசப் ஆண் டகை நெஞ்சுரம் மிக்கவர். முள் ளிவாய்க்காலில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பாதுகாப் பின் பொருட்டுக் கூடவே சென்ற பிரான்சிஸ் யோசப் அடிகளார் உட்படத் தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுக்கொண்ட பல குருமார்கள் காணாமல்ஆக்கப்பட்டமைமுன்னு தாரணங்களாக உள்ளன. இருந்த போதும், முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனவழிப்பே என்று சொல்லி சரியான புள்ளிவிவரங் களுடன்உலகுக்குமுரசறைந்தவர்.



விடுதலைப் புலிகளின் தலை வர் பிரபாகரன் அவர்கள் ஆயுதப் பலத்தால் தமிழ்த் தேசிய அரசி யல் கட்சிகளின் தலைவர்களை ஒன்றிணைத்து வைத்திருந்தார். அதன் பின்னர் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தனது ஆன்மீகப் பலத்தால் ஒன்றி ணைத்திருந்தார். இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த பேரினவாதம் மென்மேலும் வலுப்பெற்று வரும் இன்றைய சூழ்நிலையில் அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும். தமிழ்த் தேசியக் கட்சிகள் கருத்தொற்றுமையின் அடிப்படையில் ஒரு குடையின் கீழ் அணிதிரள்வதே ஆண்டகைக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக அமையும். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு: கிளிநொச்சியில் துக்கதினத்துக்கு அழைப்பு

## சிவஞானம் சிறிதரன் எம்.பி., தவிசாளர் வேழமாலிகிதன் கோரிக்கை



மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப்பிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கிளிநொச்சியில் துக்க தினத் துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை கறுப்புக் கொடிகள் கட்டி துக்க தினத்தை கடைப்பிடிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அழைப்பு விடுத் துள்ளார்.

இதற்கமைவாக, கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர்கள், வர்த்தக நிலையங்கள், பொது இடங் கள் அனைத்திலும் கறுப்புக் கொடி கட்டி துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் கோரிக்கை விடுத்துள் ளார்.

அத்துடன், எதிர்வரும் திங்கட்கிழமை காலை ஏழு மணிக்கு கிளிநொச்சி நகரில் உள்ள பசுமைப் பூங்காவில் விசேட அஞ்ச லிக் கூட்டமும், நினைகூரல் நிகழ்வும் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த நேரத்தில் வர்த்தக நிலையங்களை மூடி அஞ்சலி செலுத்துமாறும் குறிப்பிட்டுள் ளார்.

தமிழ் மக்களின் உரிமைக் குரலாக வும், தமிழ் மக்களின் துன்ப துயரங்களுக் காகக்குரல்கொடுத்துவந்தஆண்டகையை மனதில் நிறுத்தி அவருக்கு அஞ்சலி செலுத் தவும், அவரை நினைவுகூரவும் வேண் டிய கடப்பாடு அனைத்து தமிழ் மக்களிட மும் உள்ளது. இந்நிலையில், அடுத்து வரும் நாள்கள் கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக் கும் முக்கியமான நாள்கள் என்ற வகை யில்எதிர்வரும்திங்கட்கிழமையன்றுஆண் டகைக்கு அஞ்சலிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

# திங்கட்கிழமை மன்னாரில் துக்கதினம் அனுஷ்டிக்குக!

## நகர பிதா கோரிக்கை



மன்னார் மறைமாவட்டத் தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண் டகையின் இறுதி அடக்க நாளான எதிர்வரும் திங்கட் கிழமை மன்னார் வர்த்தகர் கள் தமது வர்த்தக நிலை யங்களைமூடிதுக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு மன்னார் நகர பிதா ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

மறைந்த ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் மறைவு தொடர்பாக ஊடகங் களுக்குகருத்துதெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத் தின் ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் இனம், மதம் மொழி கடந்து மக் களுக்காகக் குரல் கொடுத் தவர்.

பாதிக்கப்பட்ட மக்களுக் காக நீதியை பெற்றுக் கொடுக்க தொடர்ந்தும் குரல் கொடுத்தார். தமிழர், முஸ் லிம், சிங்களவர் என்ற பாகு பாடு இன்றி அனைவரையும் நேசிக்கும் ஒருமனிதர்.

ஆன்மீகத்துக்கு அப்பால் மனித நேயத்தை நேசித்த வர். காணாமல் ஆக்கப்பட்ட வர், கடத்தப்பட்டவர்கள், அர சியல் கைதிகளின் விடுத லைக்காக இறுதி மூச்சு உள்ள வரை குரல் கொடுத்த வர்.

இவரது இழப்பு ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்க ளுக்கும் பாரிய இழப்பு. தமிழ் பேசும்மக்கள்ஒற்றுமையுடன் துக்க தினத்தை நினைவு கூர வேண்டிய கடப்பாட்டில் உள் ளோம்.

எனவே ஆயர் அவர்க ளின் இறுதி அடக்க நாளான எதிர்வரும் திங்கட்கிழமை மன்னார் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங் களை மூடி துக்க தினத்தை அனுஷ்டிக்க வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

EXPRESS Courier Services
அன்னா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
ரொட்டி, கிழங்கு ரொட்டி, சமோசா, ரோல்ஸ் தயாரிப்பவர்.
இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
சமையல் உதவியாளர்கள்.
சுத்திகரிப்பு செய்பவர்கள்.

ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

# பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் காத்தான்குடியில் இருவர் கைது

காத்தான்குடியில் பயங் கரவாதத் தடுப்புப் பிரிவின ரால் இருவர் கைது செய் யப்பட்டுள்ளனர் என அறி விக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்க ளில் ஹாபிசம் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதத் தைப் பரப்பியதற்காக அவர் கள் கைது செய்யப்பட்டுள் ளனர்எனத்தெரிவிக்கப்பட் டுள்ளது.

இவ்வாறு கைது செய் யப்பட்டவர்கள் 28 மற் றும் 29 வயதுடைய கட் டாரில் இருந்து நாடு கடத் தப்பட்டவர்கள் என அறி விக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org